உ


# இயன்மொழி வாழ்த்து

எனப்பெறும்

# நெஞ்சுவிடுதூது.

இஃது இயற்றினர்

வேப்பங்குளம் சோ. முத்தையப்பாவலர்.



இரங்கூன்

அந்தவாடி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது.

1922.

உ

சிவமயம்

# சிறப்புப்பாயிரம்.

ஆத்திசூடிச் சூத்திரவிருத்தி யுடையாரும், செந்தமிழ்க்கழகம்,
கம்பர் கலாசாலை, திருவள்ளுவர் கலாசாலைகட்குத்
தலைமை யாசிரியருமாகிய உரத்தூர்மருத்துவம்

**கோ. வைத்தியலிங்கப்பிள்ளை எழுதியது.**

வடவேங் கடமுந் தென்கடற் குமரியும்
இடம்படு பௌவத் திமிழ்கடற் பரப்புஞ்
சிவணிய கன்னித் தமிழணி வகுத்த
மாட மதுரை மூதூர் மேய
ஆயிடை யானூ ரூரன் பூங்குடி
வாண னாயிரங் கண்ணன் மருகன்
காலங் கருதிச் செய்திகால் சீய்த்த
கருங்கா ரன்ன பெருங்கை வண்ணன்
ஆதின மழகிவே ளருள்பொலம் பூட்சேய்த்
தீதில் வான்குணத் திராம நாதப்
பெருமனை யியன்மொழி வாழ்த்தினன் பிழைதபு
கிழமையுங் கேண்மையும் மழவிடைத் தோற்றமும்
புலனெறி யாண்மையும் புகன்மொழி மதுகையும்
எய்தி நிம்பத் தடத்துறை யேந்தல்
ஆண்டவ னம்பல மெனப்பெயர் நிறீஇக்
காண்டகு படிமைக் கவின்றரு முத்தயப்
பாவல னெஞ்சறி வுறுத்திப் பயன்பெரிது
மேவத் தனாது விழுப்பமு முணர்த்தி
அறனும் பொருளும் வழாஅது காமத்
திறனணி பேணித் தெய்வமுஞ் சுட்டி
முன்னோர் நூலின் முறைபிற ழாது
தன்னேர் கிழவன் றகைமை வழீயே
மடம்படு கொடைமை மரபுங் கூறித்
திடம்படு கொடைமைச் செவ்விதில் விழைய
மாநில வரைப்பினை மதியுடம் படுக்க
எடுத்துக் காட்டென வெண்ணெண் விளையாட்
டடுத்த நாடும் நகரமுஞ் சிறப்பும்
அடைந்தா ரியல்பும் மிடைந்த செல்வமும்
தாமுலாப் போதலுந் தாழ்குழற் குழாமொடு

ஏமஞ் சாலா விளைமை யோண்முதல்
எழுவர் வீழ்ந்த வின்பப் பகுதியும்
பழுதில் கற்பின் விழுமிய பசலைக்
காமங் கண்ணிய காரிகை யொருத்தி
சிந்தைநோ யுந்தத் தெருவிலாங் கவலைக்
கண்டுமயக் குற்றுக் காரிருட் பைஞ்சிறை
வண்டே கிளியே மடவனமே தோழியே
என்றிவர்க் கொண்டு வம்மெனக் கூஉய்க்
காண்டர லின்மை கடிந்து கருத்தழிந்து
வேண்டுவயிற் றிரிதரு நெஞ்சுறா தாக
வண்டுபடு நறுமலர் மாலை வரைந்த
தன்னருஞ் சீர்த்திச் சொன்னறுந் தூக்கும்
கேட்குநர் கேட்குநர் செவிநலங் கிளரப்
பாட்டின் வல்லுநர் போற்றப் பரிந்து
பயன்றெரி பண்பிற் பல்கலை யாயும்
நயந்தெரி நல்லவை நயக்கத் தொன்மை
விருந்தின் விதிதந் துயர்நிலை யுலக
மருந்தி னுவப்பப் புணர்த்திக் கலியி
ணைந்துதலை யிட்ட வாயிர நிகழும்
மைந்துபெறு துன்மதி வருட மாவணித்
திங்கண் முதலாந் தெய்தியிற் செவ்வேள்
தங்க முன்றிலிற் றுரிசுதீர் நடையின்
மங்கள மொழிமுதல் வகுத்து மகிழ்ந்தென்.

உ

சிவமயம்

# குறிப்புரை.

## காப்பு.

திருமாலை முன்வைத்தார் காப்புடைக்கடவுள் அவராதலின். அருட்சத்தி சேரினல்லது திருமலராகிய கடவுட்கு ஆற்றல் கூடாமையின் சத்தியாகிய திருவொடு புணர்த்தி மால் என்றார். இறைவனென்றது முழுமுதற்கடவுளாகிய பரசிவத்தை. திருத்தேவி திருமகளும் பார்ப்பதியும். திருமாற்குத்திருவும் இறைவர்க்குத் தேவியுமென நிரனிறையாக்குக. பேர்வாணி யென்றது கவி தான் வழிபடு கடவுளாகிய ஞானவாணி யென்க. கலைவாணி யொருத்தி யுளளாதலின் பேர்வாணி ஞானவாணியாயினள் "ஞானவாணி வந்திறுத்தன ளென்பர்தந் நாவில்" என்ப. இப்புகழ் நூல் மேலைச் சான்றோர் செய்யுட் கட்படும் நூலாதலின் அருமை அடைதந்தனர். அருமை இயன்மொழி வாழ்த்தென்க. பாடாண் பகுதியிற் படூஉமிவ்வியன் மொழிவாழ்த்து மிக்கபுகழினையுடைய தலைவனாகிய பூங்குடி இராமநாத வள்ளலது தன்மையினை நெஞ்சறிவுறுத்தன் முகமாக, விருந்தென் விதியினமைந்து கூறுமோர் நூல். இயன்மொழிவாழ்த்தாவது "மயலறு சீர்த்தி மான்றேர் மன்னவன் — இயன்மொழிந்தன்றே யியன்மொழிவாழ்த்து" இன்னோர் என்றது திருமான் முதலாகச் சொல்லப்பட்ட எழுவரையும். அவையோர் இனிதேற்க என்க. இயன்மொழிவாழ்த்தெனப் பெயர்பெறூஉம் இந்நூலை அவையோர் இனிதேற்க, இவ்வெழுவர் தாம் ஏற்று, என்னெஞ்சிற் படர்ந்து, பயில்வார் என முடிக்க. படர்தல் ஈண்டுச் செறிதல். பயிறல் ஈண்டுவதிதல்.

## நூல்.

பூமேவு (1) என்பது முதல் பன்னான்கு தாழுடைத் தாய் (3) என்பதுவரை ஒருதொடர். பண்ணகன்ற. பண்மலிந்த. மடங்கொன்றறி வகற்றும், என்றாற்போல நங்குரவ ரென்றார். கவிதான் அந்நால்வர்க்கும் வழி வழித்தொண்டு செய்யும் நல்லுரிமைகருதி. அல்லதூஉம் அவர்க்கத்தொழும்பு புரியும் பல்லோரையும் உளப்படுத்திக் கூறியவாறுமாம். ஆயின், அது உளப்பாட்டுத் தன்மைப் பன்மையென்க. நால்வர் ஆவார் ஆளுடைய பிள்ளையும் (திருஞானசம்பந்தர்) ஆளுடைய அரசும் (திருநாவுக்கரசர்) ஆளுடைய நம்பியும் (சுந்தரமூர்த்திகள்) ஆளுடைய அடிகளும் (மாணிக்கவாசகசுவாமிகள்) அவர்தருந்தமிழ் தேவார திருவாசகங்கள். அவை யிற்றைப் பாடப்பெற்ற பதினான்கு தலங்களை யுடையதும் என்க. இனி,

பொங்குபுகழ் (3) என்பது முதல் வளநாட்டின் (67) என்பது வரை ஒருதொடர். இத்தொடர் முழுதும் பாண்டிநாட்டினிகழ்ந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள் வாதவூரடிகள் சார்பில்நிகழ்ந்த நான்கு திருவிளையாடல்களையும் ஒழித்து எஞ்சிநின்ற அறுபது திருவிளையாடல்களையுங் கூறுகின்றது. எஞ்சிநின்ற அந்நான்கையும் மேற்கூறுப. அதன்காரணம் பிற்கூறுதும். தங்குதலம் பன்னூன் குடைத்தாய் (3) பழம் பதியாய (66) கன்னிவளநாட்டின் (67) என்க. கன்னிவளநாடு. பாண்டிநாடு. இறைவனமர்ந்து அரசாளப்பெறுதலின் ஊழியினும் அழியாவியல் புடையநாடென்க. கன்னி அங்கயற்கண்ணியுமாம். அவள் "சிவம்சத்தி தன்னையீன்றும் சத்திதான் சிவத்தையீன்றும்—உவந்திருவரும் புணர்ந்திங் குலகுயிரெல்லா மீன்றும்—பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்" என்பவாகலின் இளமைச்செவ்வி வாய்ந்த கன்னியாண்டநாடென்பதுமாம்.

மேல் தானே வகுத்த (68) என்பதுமுதல் பூநகரில் (72) என்பதுவரை ஒரு தொடர். இதுநகரச்சிறப்புக் கூறுகின்றது. கெவுரிக் கோன் என்பான் சிவகெங்கை நகர்க்கு இறைவன். மேற்குழந்தை யென்பது சிவகெங்கைநகர். அதைச்சார்ந்தது பூநகரென்க. எனவே தங்குதலம் பன்னூன் குடைத்தாய் பழம் பதியாய கன்னிவளநாட்டில் குழந்தைக்கண்ணதாகிய பூநகரில் என முடிக்க. இத்துணையும் தலைவனது நாடும் நகரமுங் கூறிற்று. இனி, தலைவனது சிறப்புக் கூறுகின்றது.

தாமகிழ்ந்தே (72)-(80) முதல் மகபதியான் (131) என்பது வரை ஒருதொடர். நாற்றிசையும் (79) திசையெங்குமுள்ளாரும், கொண்டு, உவந்து, ஞாலம் (80) தன் ஆணைவழிப்பட்டார். திருநெடுமாலுக்குரிய சக்கரமுஞ் சங்கும் இத்தலைவனுடையதாக்கிச் சக்கரத்தான் சங்குடையான் (81) என்றார் திருநெடுமாலை இத்தலைவனாக உட்கொண்டு. செல்வமுடையார் திருநெடுமாலின் கூறென்பவாதலின் "திருவுடை மன்னரைக்காணிற் றிருபாலைக் கண்டேனேயென்னும்" என்பது மறைமொழி. பிறண்டும் பலவிடங்களில் இவ்வாறே தலைவனைத் திருநெடுமாலாக்கிக்கூறுவர் இவ்வாசிரியர். ஆண்டாண்டு அது கண்டுகொள்க. பஞ்சக்கரத் தான் (83) ஐந்து அக்கரங்களைத் தனக்கு உறுதிமொழியாகக் கொண்டோன். அஞ்சு அக்கரம் சிவமூல மந்திர மென்க. பெருந்தனம் (86) இரண்டில் முன்னது நந்தாவென்னும் அடையினால் கல்வியையும், பின்னது பெரியதனக்காரனென்னும் வழக்கையும் குறித்து நின்றது. பண்டிசைத்த ஆன்றோர் இலக்கணம் (95) என்றது நெடுமாலின் திருமேனிச் செவ்வினய. கருநிறமென்பது அதனைப்பின் காயாவின் பூவணத்தான் (96) என்று விளக்கினர். காயாநறும் போதோ, வென்ப.

எங்கள் புவனேந்திரன் (96) என்றூர். தம்குலத்துள்ளான் தலைவன் என்று விளக்குதற்கு. மீனமுதற் பத்தாகுந் தோற்றம் (100) என்றது மாயோனது அவதாரம் பத்தினையும். தோற்றம். அவதாரம். சத்தாவதாரம் (101) என்றது சிராமனைக்குறித்து நின்றது. அவர் சிலமிக்குடைய ராதலின். நாயகன் தோற்றத்தின் இராமர் மூவரில் " நடையினின்றுயர்— இடை நிகழ்ந்த இராமாவதாரம் " எனகம்பர் கூறுமாறு முணர்க. அவ்விராமரையனையான் இவ்விராம நாதேந்திரத் தலைவன் என்க. சத்தாவதாரமாய்ப்பிறந்த சிராமனெனக்கூட்டுக. ஆதினமழகியான் (103) தலைவனது தந்தை.

பொங்க முடன் (131) என்பதுமுதல் உயர்குடையான் (175) என்பதுவரை ஒரு தொடர். இது தலைவனது தசாங்கம் கூறுகின்றது. தசாங்கமாவண மலையும், யாறும் நாடும், நகரும், பரியும், கரியும், மாலையும், முரசும், குடையும், ஆணையும் என விவை.

மாதவஞ்சேர் (175) என்பது முதல் சிறப்புடையோன் (259) வரை ஒரு தொடர், இது மீண்டும் தலைவனது சிறப்புக் கூறுகின்றது. இனி,

பாராண்ட (259) முதல் பாவலனை (358) என்பதுவரை ஒரு தொடர் இது ஆசிரியரது புகழ் கூறுகின்றது. இதில் (260) முதல் (298) வரை ஆசிரியர் தம் நாட்டுக் குலநலத்தையும். ஏடவிழும் (298) என்பது முதல் எழின்மிகுசேய் (321) என்பது வரை தம் குடிமையையும் தம்மையும். மல்லன்மிகு (321) என்பது முதல் வாழ்துாயன் (347) என்பது வரை தாம் வழிபடு குரவராகிய திரு வாதவூரரது வரலாற்றுச் சிறப்பினையும் கூறுகின்றூர். ஆசிரியர் தம்மை இத்துணையும் விரித்துக் கூறியவாறென்னை கொல்லெனின் இந்திரகுலத்தினராகிய தம் நாட்டினரைத் தம்போலக் கல்வியொழுக்கங்களில் ஆற்றுப் படுத்தி உயர்த்துதல் கருதியென்க. " தாமின்புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந்தார் " என்பவாகலின் பிறுண்டும் மோகமுறும் (347) என்று தொடங்கிப் பாவலனை (358) எனத் தம்மையே தலைவிகூற்றுகக் கூறித் தலைவனே டடைவு படுத்தி இப்பெற்றியதங் குலத்துக்கவியை அடைந்தின்புறாஉம் தலைவனது மாண்பை யினிதுணர்த்தினூர். பாவலனை (358) காத்தோம்பும் (359) குணக்குன்றம் என்க. குணக்குன்றம் என்றது ஈண்டுத்தலைவனை.

இனி சொல்லுமந்த என்பது முதல் ஓர் நாளில் (383) என்பதுவரை ஒரு தொடர். தேறுமதி (374) காட்டு நெஞ்சே (378) என்பன விரண்டும் விளி. மதி—மதியே. தேறு—

தெளிவாயாக. நெஞ்சே. காட்டு—காட்டுவாயாக. என்றனள் தலைவி. இப்பெற்றியினை யுடையான் எம் தலைவன் என தலைவி நெஞ்சறிவுறுத்தி அவன் திருவுலாப் போதலைச் சொல்லிய தொடங்குகின்றாள்.

தக்கோரார் (383) என்பது முதல் சென்று தூதாயுரைக்க (457) என்பதுவரை ஒரு தொடர். இராமநாதேந்திர மால் பொய்கையாடி ஆடைபுனைந்து நீற்றை யணிந்து திலத மிலங்க செழுங்கலவை சேர்த்துப் பூசி குண்டலங்களிட்டு அணிந்து அமர்பொழுதில் கொடியிடையார் ஆலத்தியேந்தித் திட்டிசுற்றி அரசே! காக்கவென்று வாழ்த்த, அமைச்சர் மறையோர் ஆசிசொல, கவிவாணர் வாழ்த்து வழங்க, மேதினியோர் மேவிவர குலதேவதையை வாழ்த்தி தன் னிரண்டு பக்கமதில் அணங்கனையார் இருவரோடும் (காதற்கிழத்தியர்) தடந்தேரேறி மறுகிலுற்று தடாரிமுதலாகச் சொல்லப்பட்ட பல்லியங்கள் முழங்கிவர மாதர் கும்பங்களேந்த தேன்மொழியார் காளாஞ்சி அடைப்பை யேந்திச்சேர்ந்துவர வீரர்கள் பணிந்துவர சுற்றமும் நேயர்களும் தோழரும் தொடர்ந்துவர இன்னபெற்றியன் வந்தானெனச் சின்னமியம்பி அவன் செவியிலூன்ற வீரா விசயா குமரா போரேறே கலைவலா தனதாதடைக்கையா கடல்வண்ணா கவினுடையாய் பெற்றியாய் மாரனே சிராம நாதேந்திர தீரா என வந்தியர்க ளேத்தெடுப்ப இராம நாதேந்திரன் பவனிவரும் தேர்முழக்கும் படைமுழக்கும் தூதாயுரைக்க எனக்கூட்டுக.

மாதர்குழாம் (458) என்பது முதல் மயங்கி நின்றார் (492) என்பதுவரை ஒருதொடர். மாதர்குழாம் எதிர்ந்து பூந்தாரான் பொற்பினிலே மயங்கி உதிர நீருக தனம் கச்சைக் கிழித்து மேலெழும்ப வளை கழன்றுவிழ (மயங்கி நின்றார் எனக் கூட்டுக.)

மங்கலத்தேரும் மறுமறுகிற் சேர்வு கண்ட (492) என்பது முதல் பாவை நலமும் பருகாமல் (788) என்பதுவரை ஒரு தொடர். இது தலைவன் திருவுலாப் போதருங்கால் அது கண்ட பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண். என்று சொல்லப்பட்ட எழுவகைப் பருவத்துப் பெண்களும் காமுற்ற நிலையைக் கூறுகின்றது. எழுவகைப் பருவங்களாவன பேதை எழுவயதுடையாள் இவளைக் காமஞ் சாலா விளைமையோ ளென்ப. பெதும்பை பதினொரு வயதுடையாள் மங்கையும், மடந்தையும், அரிவையும், தெரிவையும், பேரிளம் பெண்ணும் முறையே பதின்மூன்று பத்தொன்பது இருபத்தைந்து முப்பத்தொன்று நாற்பது வயதினராவர். தாய் தந்தைமாட்டு மோகந் தலைக்கேறிச்

சூலடைந்து பிறந்தமாணிக்கம் என்க. இது தாய்தானே தந்தையைவலிய அணைத்த செய்தி உணர்த்திற்று அதனாற் பெறாஉம் சிறப்பென்னெனின் வலிய அணைத்த புணர்ச்சிக்காலத்து அவ்விருவர் மனமும் வேறொன்றையும் பெறாது இன்பச்செவ்வியே பெற்று அதன் விளைவாகப் பிறந்த மகவும் இன்ப நலனே நிறைந்து சிறக்கும்" என்பது. ஈண்டுக் கூறும் பேதையும் அதுவேயாயினள். இன்பம் உணராதேயும் அஃதையயாதின்று என்பது தோன்ற இளம் மாணிக்கம் என்றார். இவ்வாறே மேலேகூறும் எழுவகைப் பருவப் பகுதிகளில் ஆங்காங்கு ஆசிரியர் அமைத்துக்கொண்ட அரும்பெரும் நுட்பங்களைக் கண்டுதெளிக. விரிவஞ்சி அவையிற்றை ஈண்டெடுத்துக் கிளவாது விடுத்தாம்.

இனி, கோவையிதழ் (788) என்பது முதல் மணமாலை வாங்கி நீவா (930) என்பதுவரை ஒரு தொடர். இது தலைவி இராம நாதேந்திரத் தலைவனைக் காமுற்றவாறும் காமுற்று வண்டு, கிளி, அன்னம், விறலி, என்றிவரைத் தலைவன்பாற் றாதனுப்பி அன்னவர் திரும்பி வாராமையின் அயர்ந்து நெஞ்சிற்குத் தன் காதலை அறிவுறுத்தித் தலைவன்பால் மணமாலை வாங்கிவா என்றவாறும் கூறுகின்றது. நந்தாக் குணமாலை தாங்கு மெழிற் கொற்றவன் (930) என்று குறிப்பிட்டார். தலைவியின் பெயர் குணமாலை யெனக்கொண்டனர் போலும்.

இனி, பன்னூன்கு தமிழுடைத்தாய் பழம்பதியாய கன்னிவளநாட்டின் குழந்தைக் கண்ணாதாகிய பூ நகர் (பூங்குடி) க்கிறைவன் ஆதினமழகியான் புதல்வன், வெண்மலையான், சோணமா நதியான், ஆரூர் நாடன், பூமா நகரான், கரியுடையான் நயப்பரியான், இடிக்கொடியான், எழில் முரசான், ஆணையினான், உயர்தானையினான், தண்குடையான், செல்வன், முத்தையப் பாவலனைக் காத்தோம்புங் குணக்குன்றம் ஆகிய இராம நாதேந்திரத் தலைவன் திருவுலாப் போம் பொழுது மாதர் குழாமும், எழுவகைப் பருவத்துவிழுமிய பெண்களும் காமுற்றுச் சிறக்க குணமாலை யென்பாளோர் தலைவி தலைவன் பாற் செறிந்த காத லுடையளாய் யானும் நெறிப்பட்டேன் வண்டு முதலிய தூது விட்டேன் அவை திரும்பி வரக்காணகிலேன் நெஞ்சே நீ சென்று அவன்பால் மணமாலை வாங்கிவா என்றாள் எனக்கொண்டு கூட்டி வினைமுடித்துக்கொள்க.

இக்குறிப்புரை யெழுதினார் மேற் சிறப்புப்பாயிரஞ்செய்த

உரத்தூர்

**கோ. வைத்தியலிங்கப் பிள்ளை.**

உ

சிவமயம்

பூங்குடி

## இராமநாதன் இயன்மொழி வாழ்த்து

# நெஞ்சு விடு தூது.

திருமா லிறைவன் றிருத்தேவி மூத்த
பெருமான் முருகன்பேர் வாணி—யருமை
இயன்மொழிவாழ்த் தின்னோ ரினிதேற்க வேற்றுப்
பயில்வாரென் னெஞ்சிற் படர்ந்து.

பூமேவு கஞ்சப் பொகுட்டினுறை வேதனருள்
பாமேவு முந்நீர்ப் பரவையிடைத்—தாமேவு

கண்ணகன்ற ஞாலங் கருதும் பொருள்வைப்பி
னெண்ணகன்ற பல்வளத்தி னேரமைந்து—பண்ணகன்ற

நங்குரவர் நால்வர்தரு நற்றமிழைக் கொண்டுதிகழ்
தங்குதலம் பன்னான்கு தானுடைத்தாய்ப்—பொங்குபுகழ்க்

கூடற் பதியமர்ந்த கூத்தனை யிந்திரனைக்
கூடப் பழியகற்றுங் கோமானை—வாடுகரி

சாபத்தைத் தீர்த்த சலதரனை மாமேருச்
சாபத்தைச் சேர்த்த தடக்கரனை—மாபத்தன் ௫.

ஆய வணிகன் வழுதிக் கறைந்தவணம்
ஆயவணி கம்பெறுவை யவ்விடத்துத்—தூய

திருநகரங் காணென்ற சித்தனை யஞ்சா
திருநகரங் காணொனுஞ்செய் யோனை—அருமகத்தின்

முத்தனத்தா ளைத்தந்த முன்னோனை வெண்மையொளி
முத்தனத்தா ளைத்தந்த மூலனைச்—சித்தனெனக்

காட்டிமணஞ் செய்த கருத்தனைப் பைங்கடப்பங்
காட்டிற் செறிந்து கதித்தானை—வீட்டிற்

குரியவிரு வோர்க்காடு மும்பனை வாதிற்
குரியவிரு வோர்தே டவனைச்—சரியன்னங் ௧௦

குண்டோ தரற்குக் கொடுத்தானை யுண்மைதனை
யுண்டோர் தமக்குவர மூட்டுவனை—ஒண்டொடியாள்

அஞ்சவன் னக்குழிதந் தாண்டானை நீர்வேட்கைக்
கஞ்சமுற வையை யழைத்தானை—அஞ்சொல்லாட்

கேழுகட லுந்தந்த வேகனைத் தீப்பவமா
மேழுகட லுந்தீய்த்த வீசனைப்—பூழியனை

மீண்டுலகிற் காட்டும் விறலோனை யன்பர்களை
மீண்டுலகிற் காட்டா விழியானை—ஆண்டுக்ர

பாலக னைத்தந்த பாண்டியனைப் பானீர்வாய்ப்
பாலகனைத் தந்த பராபரனைச்—சீல க௫.

வளைசெண்டு வேல்கொடுத்த வானவனை மாதர்
வளைகொண்டு மாலளித்த மானை—வளையொன்று

வாரிவற்ற வேல்விடச்செய் மாதவனை ஞானவின்ப
வாரியுற்ற பேர்க்கருள்தீ வண்ணனை—மாரிமுகி

லூர்திமுடி சிந்தவரு ளுத்தமனை யொண்மயமா
லூர்திமுடி யானெனும்பே ருற்றவனைப்—பார்திகழும்

பொற்குவைய மேருவினைச் செண்டாற் புடைத்ததனிற்
பொற்குவிய வீந்தருள்செய் பூரணனை—வற்கலைசேர்

மாமுனிவர் தேற மறைப்பொருள்தந் தானைக்கா
மாமுனிவர் மீற மறுத்தானைக்—கோமறுகில் ௨0.

மாணிக்கம் விற்கவரும் வாணிகனை மாமலர்த்தாள்
மாணிக்கன் றீந்த மறவோனைக்—காணின்

வருணன் விடுகடலை வற்றவைத்தா னைத்தீ
வருண னெனத்திகழு வானைக்—கருணைமுகில்

நான்மாடக் கூடலாய் நாட்டினனைச் சையத்தி
னான்மாடக் கான்மருக னானவனை—மான்மறைத்துச்

சித்தரா யாடுஞ் சிவபரனைப் போற்றியருச்
சித்தரா நாடுந் திவாகரனைப்—பத்தனெதிர்

கல்லானை தின்னக் கரும்பளித்த கையானைக்
கல்லானைக் கற்கவருள் காரணனை—வெல்லவரு ௨௫.

மாயக் கரமலையை மாய்த்தானை மூலவிருள்
மாயக் கரமலர்த்து மாண்பானை—நேயமிகு

பால குமார விருத்தராய்ப் பான்மொழியாள்
பாலடைந்து பாகமருள் பண்ணவனைச்—சீலனுக்கக்

கான்மா றிடாது கருணையொடு வெள்ளியன்றுட்
கான்மாறி யாடியருள் கற்பகத்தை—மான்மாறி

உண்மையென நம்ப வொருபழியை யஞ்சிமணத்
துண்மைதனைக் காட்டு முயர்வோனை—அன்னையைத்தான்

சேர்ந்துதந்தை யைக்கொலைசெய் தீப்பழியாற் சேண்மெலிந்து
சேர்ந்துழன்று னைக்காத்த செம்மையனைத்—தேர்ந்தொருவன் ௩௦.

அங்கம்வெட்டி 'பாடு மழகனை மாமறையா
றங்கமென வாக்கிவைத்த வாதியனைப்—பங்கமுற்றோர்

நச்சரவைக் கொன்றகண நாதனைத் தஞ்சமென்ற
நச்சரவைக் கொண்டருள்கூர் நாயகனைப்—பொய்ச்சமணர்

ஏவிவரும் மாயப் பசுவிறக்க வேரேற்றை
யேவியருள் செய்த விறையோனை—மாவிரதச்

சாமந் தனுக்கிரங்கித் தக்கமெய்க்காட் டிட்டவருட்
சாமந் தனக்கிரங்குந் தண்மையனைச்—சேமவுல

வாக்கிழிவேந் தற்களித்த வள்ளியனைச் செம்பொருள்சேர்
வாக்கிழுக்கார்க் காக்குநல வானவனை—நோக்கமுறு ௩௫.

செட்டிப்பெண் ணூர்க்குவளை சேர்த்தவனைப் பட்டினத்துச்
செட்டிப் பெருந்தகையைச் சேர்த்தவனைப்—பட்டமங்கை

ஆலடியின் மாதருவர்க் கட்டசித்தி யீந்தானை
ஆலடியி லன்றமர்ந்த வையனை—மால்வளவற்

காப்பான் றிருக்கதவக் கட்டழித்துக் காட்சிதந்து
காப்பார்க்க ணூதுவிடை காட்டினனைப்—பூப்புரக்கு

மன்னருறு போரில் வழுதிபடை தம்மாவி
மன்னநன்னீர்ப் பந்தரது வைத்தானைப்—பொன்னனையார்

மாமனைபிற் சென்றிரச வாதஞ்செய் தானையன்பர்
மாமனையா முள்ளத்து வாழ்வானைப்—பூமனுக்கு ௪௦.

மாறும் வளவனையே வன்மடுவில் வீட்டிமற்று
மாறா தணைந்த மருகோனை—யூறடைந்த

ஏருழவ னுக்குலவாக் கோட்டை யளித்தொற்றை
யேருழவ னானபர மேச்சுரனைத்—தாருலவு

மாமனா ரில்லா வணிகன் வழக்குரைத்து
மாமனா வந்துரிமை வைத்தானைத்—தூமதியார்

மன்னும் வரகுணற்கு வாழ்சிவலோ கங்காட்டி
மன்னு மதியளித்த வாமனைத்—தன்னடியன்

மாற்றான் மருள வனவிறகு விற்றோட்டி
மாற்றாப் பெருங்கருணை வைத்தானைப்—போற்றுமுயர் ௪௫.

சேரமான் காணத் திருமுகம் பத்திரன்பாற்
சேரவான் கையாற் றெருட்டினனைக்—கோரமழை

நீரிற் பலகையிட்டு நின்றுபா டென்றருளி
நீரிற் றிகழ்தருநன் னேர்மையனைச்—சீரிற்

சிறந்தா ளிசைவாது செய்யச் செழியற்
சிறந்தானைத் தாழ்த்தியசெய் தானை—மறந்தழைக்கும்

பன்றிக் குருளையொரு பன்னிரண்டும் பாலருந்தப்
பன்றிப் பிணைபோற் பரிந்தானைப்—பன்றிமுக

மானிடரா மன்னவரை மந்திரிக ளாக்கியினி
மானிடரா காதருளு மாதவனைக்—கானின் ௫௦.

வலியோய்ந் தடைந்தகய வாய்க்குறுதி வாய்ப்ப
வலியான்பேர் வைத்தபெரு மானை—நலிபசியால்

வெம்புவந்த நாரைக்கு மேலான முத்திதந்து
வெம்பிறவி யாற்றியருள் வேதியனை—அம்பிறங்கும்

ஆலவாய்ப் பாம்பி னடியான் மதுரையளந்
தாலவா யாக்குமுய ரத்தனை—வேலையெனச்

சூரகல வீரனாய்ச் சுந்தரப்பே ரம்பெய்து
சூரத் திறன்காட்டுந் தோண்மையனைப்—பேரகில்லாச்

சங்கப் புலவர் தமிழையா ராய்கெனவே
சங்கப் பலகைதருந் தன்மையனைத்—துங்கத் ௫௫

தருமிக்குப் பொற்கிழிமுன் றந்தானை மாலோ
தருமிக்குச் சோதியாவந் தானைப்---பெருமிதத்தால்

மீறுமொழிக் கீரனைநீர் வீழ்த்திக் கரையேற்றி
மீறுமொழிச் சீரை விதித்தானைத்---தேறவவ

னையிலக்க ணங்கற்ற வாதிமுனி யாற்றெருட்டி
யையிலக்க ணங்கற்பித் தாண்டானை---மெய்யறிந்த

சங்கத்தா ரின்கலகஞ் சாய்த்தானைச் சைவப்ர
சங்கத்தா ரின்கழகஞ் சார்ந்தானைத்—தூங்கவிடைக்

காடன் பிணக்ககற்றிக் காத்தானைத் தண்டுளபக்
காடன் மனங்களிக்கக் கண்டானை—யேடவிழ்தார் ௬0.

மங்கைமணங் காணவலை வீசினானைக் கலைமா
மங்கை யிணங்க வருள்வானைப்---பங்கயவாய்ச்

சம்பந்த னால்வழுதி தன்சுரந்தீர்த் தேயமணர்
சம்பந்த நீக்கவருள் தந்தானை---யெம்பந்த

நீக்குந் தமிழ்மறையா னோர்ந்துவா தாடியவர்
நீக்குந் துறைக்கிணங்கி நீதிவழா---தூக்கமின்றித்

தோற்கக் கழுவிலிட்டுத் தூநீற் றொளியினிருள்
தோற்க வருளைச் சுரந்தானை---வேற்கணிக்கு

வன்னி கிணறிலிங்க மன்னவழைத் தானைநுதல்
வன்னிவிழி காட்டுமகா யோகியை—மன்னிவளர் ௬௫.

ஒண்ணிதியாய் முன்னொளியாய் ஓங்குமர சர்க்கரசாய்ப்
பண்ணைப் பணைத்த பழம்பதியாய்—நண்ணுமிசைப்

பாண்முரலும் ஒண்கடம்பின் பாற்பரம னைப்போற்றும்
மாண்செழியர் கன்னி வளநாட்டின்—வேண்டியயன்

தானே வகுத்த தருக்குடைத்தாய் மால்கெவுரிக்
கோனே தனிப்பெருஞ்செங் கோனடத்திக்—கானேறும்

தண்டா ரிலங்குமுடி தான்றிகழ வேயரசு
கொண்டார்ந்து வாழுங் குழந்தைக்கண்---வண்டாரும்

கஞ்சங் குமுதங் கருநீல மாமலரும்
அஞ்சங் குடவளைக ளார்மருதம்---நஞ்சங் ௭0.

கரந்தமிடற் றண்ணலார் காலிற்றண் சாத்தி
உரந்தவா வாழியைக்கொண் டோங்கு--பரந்தாமன்

கோயில் கொளும்புறவுங் கூட்டமா யாங்காங்கே
வேயில் கொளுங்குறிஞ்சி மேனிலமும்--சேயமலர்

மாமா தவள் மருவு மாநகர மென்னவொளிர்
பூமா தவள்வளரும் பூநகரிற்--றூமகிழ்ந்தே

இன்பமா யெக்களிப்பா யேற்கு மிரவலர்கள்
துன்பந் துறக்கவளர் ருந்துயோன்--அன்பிற்கே

நல்வரம் பாயினேன் நானிலத்தின் வண்டர்களை
வெல்வரம்பின் மிக்க விறலுடையோன்--சொல்வரம்பு

சற்றுங் கடவாதான் றண்ணளியான் றிண்மையுளான்
பற்றைச் சிவனடியார் பாற்பதிப்போன்—உற்றுணரும்

போத முடையான் புகழுடையான் புன்மையிலா
நீத முடையா னிறையுடையான்—ஓதரிய

மாட்சியான் வண்மையினன் மாற்றருஞ்சீர் நல்விளைக்
காட்சிபல கண்டு களிப்படைவோன்— ஆட்சிசெயும்

ஆற்ற லுடையா னருளுடையா னண்டர்களும்
போற்ற லுடையான் புயவலியான்—நாற்றிசையும்

கொண்டு மதிக்குங் குணமுடையான் மூவுலகுங்
கண்டு மதிக்குங் கருணையினன்—பண்டுள்ளோர்

நற்றவத்தான் வந்த நலமுடையான் ஞாலமதைச்
செற்றமின்றிக் காக்குந் திறலுடையான்--கொற்றமிகு

சக்கரத்தான் சங்குடையான் சந்தகமுஞ் சாற்றிடபஞ்
சக்கரத்தான் றண்கொடையான் றாளாளன்--மக்கட்

பிறப்பின் பயனுணர்ந்தே பின்னமிலா வீகைச்
சிறப்பின்மே லன்பு சிறந்தோன்--அறப்பயனை

யார்மாட் டடைகுவமென் றூர்வமொடே சாரும்வறி
யார்மாட்டி லன்பி னருளண்ணல்--பேர்நாட்ட

வந்தான் வளர்ந்தான் மகிழ்சிறந்தா னற்பெரும்ப
தந்தா னருளெனவே தான்கொண்டான்--நந்தாப்

பெருந்தனத்தான் செல்வப் பெரியன் வியக்கும்
பெருந்தனத்தான் றெய்வப் பிரியன்—வருந்தனத்தில்

இச்சையுள்ளான் மிக்க வெழிலுள்ளா னல்லபொருள்
விச்சையுள்ளான் வேத விழுப்பொருளான்—கொச்சையிலா

வேட்கையுடை யான்பகைவர் வீரம் பிளிக்கவென்றி
வாட்கையுடை யான்பெரிய• வாழ்வுடையான்—தோட்குவமை

மற்றில்லா வீரன் வலாரி குலத்தோன்றல்
பற்றில்லார்க் காக்கும் பலனுணர்வான்—வெற்றிமிகு

மாரவே ளேக்கும் வடிவுடையான் மாமயிற்கு
மாரவே ளேற்கும் வரமுடையான்—ஆரமணி ௯௦.

அம்புயத்தான் சங்கரன்பா லன்புடையான் மாலீன்ற
அம்புயத்தான் மெச்சு மனையுடையான்—அம்புவியில்

வந்திரப்போர்க் கேற்கு மலர்முகத்தான் காரளிகள்
வந்திரக்கு மாலைசெறி மார்பகத்தான்—நந்திரக்கந்

தன்னுடன்வில் லாருந் தடக்கரத்தான் சொற்புலவர்
தன்னுடன்வில் லாரவருள் தண்கரத்தான்—மன்னுமலை

ஏங்கிடவே வீங்கு மிருபுயத்தா னண்டர்முடி
தாங்கிடவே யோங்கு தருபதத்தான்—ஓங்குபுகழ்

கண்டொலிக்கும் வீரக் கழலுடையான் வீரருயிர்
உண்டொலிக்கும் வைவே லுறுப்புடையான்—பண்டிசைத்த ௯௫.

ஆன்றோ ரிலக்கணத்திற் கான்ற விலக்கியமாய்க்
கான்றோன்றுங் காயாவின் பூவணத்தான்—யான்றேர்ந்து

சாற்றவொணு நற்றகையான் சாராதா ரும்வலிந்து
போற்றநிற்கு மெங்கள் புவனேந்த்ரன்—மாற்றலர்க்குக்

கூற்றுவனு யல்லாரைக் கூர்ந்தகனி வோடேற்றுப்
போற்றுபவ னுகும் புகழ்ச்சிங்கம்—தேற்றமின்றி

வன்பி னெதிர்த்தவரை வாரித் தரையிலடித்
தன்பி னடக்கு மடற் களிறு—மன்புலவர்

மான மதித்து வரிசைபொழி மாமேகம்
வான மதிக்க வளர்தருவாம்—மீனமுதற் ௧௦௦.

பத்தாகுந் தோற்றம் பயன்பெறவே சீலமுறு
சத்தாவ தாரமாய்த் தான்பிறந்த—சுத்தகுண

சீராமன் போலச் செழித்துவளர்ந் தோங்குமெங்கள்
சீராம நாதேந் திரதீரன்—ஏர்பெறவே

என்றுமொரு தன்மையா யேற்றமுடன் வாழ்ந்திருந்த
குன்றாத செல்வக் குபேரனுங்—கன்றாத

சீர்த்தி நிறைநல்லா தீனமழ கண்ணலருள்
பார்த்திபனன் னோன்பு பழகிவந்தோன்—பேர்த்தமலை

மற்புயமு மேலா மதித்திறமு முற்றிலங்கி
அற்புதச் செய்கைபல வாம்புரிந்து—சொற்றுலங்கும் ௧௦௫.

மன்சிறந்த சுப்பைய வள்ளற் பெருந்தகையைத்
தன்சிறிய தந்தையாத் தான்பெற்றோன்—கொன்சிறிதும்

இல்லாத வீர னினிய செழுங்குணத்தான்
பொல்லாத புன்னெறியிற் போகாதான்—செல்வத்தின்

மிக்க கருத்துடையான் வேறொன்றை யுன்னாதான்
ஒக்கல் பொருள்முதலா வுள்ளுவோன்—தக்கமதிச்

சேயகுணச் சண்முகனைச் சேட்டச் சகோதரனாய்
நேயமொடு பெற்றே நிலவுமன்னன்—மேயவலி

மிக்க திறலுடையான் வேட்டந் தனில்விருப்பன்
தக்கநிலை ஞர்த்தாங்குஞ் சால்புடையோன்—பக்கலுறு ௧௧௦.

பின்னோ னறுமுகப்பேர் பெற்றபெருஞ் செல்வத்
தன்னோனை யின்றுணையா யார்வமுற்றோன்—இந்நாளிற்

பேதமில்லாச் சிந்தைப் பெருமை யுடையனும்
ஓதரிய சுற்றமதி லுத்தமனும்—சீதமுறும்

அன்புடைய னந்தலைவ னாணை கடவானும்
இன்புடனே பக்க விருப்பவனும்—மன்பெருமைக்

குற்றவனா மோங்கு முயர்சாமி நாதப்பேர்க்
கொற்றவனை மந்திரியாய்க் கொண்டுவைப்போன்—செற்றமின்றிச்

சார்ந்தவே தாந்திவழி தன்னில்வந்த சீலனெறி
நேர்ந்துநின்ற மேலா நிலையினின்றோன்—கூர்ந்தநலச் ௧௧௫.

சிந்தையா னூர்காஞ் சிரங்காலான் மாதவத்தால்
வந்தமக்கட் பேற்றின் வளமுடையான்—நந்தலிலா

மாமனையான் செல்வ மலிவுடையான் வண்டுளபத்
தாமனையே போற்றுந் தருக்குடையான்—வீமனைநேர்

மால்சுந் தரராச மாமனையே மாமனெனச்
சீலமொடு பெற்ற திறலுடையான்—ஞாலமதில்

நல்லறத்தாற் றின்படியே நாளுக்கு நாட்சிறப்பாய்
இல்லறந டாத்து மியல்புடையான்—மல்லன்மிகச்

சார்சீல மால்வெள்ளைச் சாமிதனை மைத்துனனாச்
சீராகப் பெற்ற சிறப்புடையோன்—பாரதனிற்

றேட்டாண்மை யுள்ளான் திருமருவு நல்லா றூர்
நாட்டாண்மை யுள்ளான் நறும்பழனங்—கூட்டமுறும்

ஒக்கூரின் வாழழகர் சாமி யுறவோனைத்
தக்கநன் மைத்துனனாத் தான்பெற்றோன்—நிற்குமலை

பூழிபட மோதும் புயவலியான் தங்குலத்தார்
வாழியென வாழ்த்தும் மதுகையான்—ஆழியென

நீர்சூழ் கழனி நிரைசெறியும் நற்பொரவ
லூர்வாழுஞ் செல்வன்மிக் குண்மையுள்ளான்—தார்வாழு

மார்ப னரசப்ப மாமுகிலை வான்றுணையாய்ப்
பார்மகிழப் பெற்றிலங்கும் பார்த்திபன்—ஏர்பரவு

பாகனே ரிப்பதியிற் பண்பினமர் பில்லப்பன்
மோகமிகு தோழமையை முன்கொண்டோன்—மாகமுறு

கார்மேக வண்ணனைப்போற் கற்புடைய மாதிரு
பேர்மருவ வாழும் பெருந்தவத்தோன்—நார்மிகுந்த

கோசலைகை கேசியைப்போற் கூர்ந்தகனி வாய்வளர்க்கும்
மாசிலா வன்னையர்பேண் மாமதலை—ஈசனருட்

பேற்றாற் கிடைத்தமக்கட் பேறுடையான் றெய்வவருள்
நீற்றாற் றுலங்கு நெறிச்சமயி—நோற்றூர்

மனம்போல வாழ்வருளு மாதேவ னல்லா
தினமழக வையனையே சிந்தித்—தினமகிழத்

தங்கள்குல தேவதையைச் சந்ததமும் போற்றிமிக
மங்களமா வாழ மகபதியான்—பொங்கமுடன்

எண்டிசையுஞ் சென்ற வெற்றிக்கீர்த்தி தன்னிறமாய்
விண்டிகழ வோங்குமுயர் வெண்மலையான்—அண்டர்பணி

ஈசன்முடி தன்னி லிருக்குமந் தாகினிபோல்
வாசமுறு நற்சோண மாநதியான்—தேசமதின்

ஆருந் தலைமை யமைதியுட னாட்சிபெறும்
ஓர்மையுறு நல்லவா றார்நாடன்—கார்மேகம்

துஞ்சும் பலசோலை துய்யநீர் வாவிதடம்
இஞ்சியகழ் நாற்பாலு மேய்ந்திருக்க—விஞ்சுமணி க௩ரு.

மாடகூ டங்கள் வரிசையா யுற்றிலங்கப்
பாடகர்கள் சாலை பலமடங்கள்—பீடுபெறு

தந்திரங்க ளோதுந் தவச்சாலை நூனிலயம்
மந்தணமா யோகியர்கள் வாழுமிடஞ்—சந்ததமும்

பைந்தமிழைக் கற்றுப் பயில்கழக மேழிசைகள்
சந்தமுற வோங்குந் தனியரங்கம்—விந்தைநடஞ்

செய்யா யுதப்பயிற்சி செய்கின்ற பல்சாலை
ஐயமிடுஞ் சாலை யறச்சாலை—பையரவம்

சூடும் பெருமான் றுணைவி திருக்கோயில்
கூடுபல தேவர் களின்கோயில்—பாடகன்ற க௪0.

ஆதிசைவர் வீதி யரசர் பெருமறுகு
கோதில் வணிகர்குழாங் கொண்மறுகும்—ஏதமிலா

வேளாளர் தம்மிருக்கை வீரமிகு மிந்த்ரகுலக்
காளையர்கள் வீதி கணிகையர்கள்—வாழ்வீதி

பேரா வணமுதலாப் பின்னமில்பல் சாதியர்கள்
தாராள மாய்ச்செறிந்து தங்குமிடஞ்—சீரான

இத்தனைநல் லங்கவணி யேற்றமுடன் பிளிறு
மத்தகயத் தின்றூர வாரமும்—புத்தியுளோர்

தேரு மிலக்கணங்கள் சேர்ந்தகுதி ரைக்கனைப்பும்
ஊருமிர தத்தா லுறுமொலியும்—பாரனைத்தும் க௪ரு.

கொள்ளையிடுங் காலாட்கள் கொக்கரிப்பு மொன்றாகி
மெள்ளவிண்ணி லெட்டும் வியப்புடைத்தாய்—ஒள்ளிலைவேற்

சிங்காரப் பங்கயக்கைச் செம்மற் குமரேசன்
மங்காத நற்கருணை வாழ்வுபெற்றுப்—பொங்கமுறும்

எந்நகரு மிந்நகருக் கீடிலையென் றேமுரசஞ்
சொன்னகராக் காட்டுந் தொனியுடனே—பொன்னகரை

ஒட்டிவளர் கோபுரங்க ளுன்னதச்சி றப்புடனே
மட்டில்லா தோங்கிடும்பூ மாநகரான்—விட்டெறிந்து

மாசிலா விந்த்ரகுல வள்ளலெனுங் காட்சிதரு
வாசமுறு கற்பகப்பூ மாலையினான்—பாசமின்றி ௧௫0.

நிற்கு முனிவர் நிலைகுலையப் பாற்கடலார்
கற்கியாம் விண்டுதுயில் கண்விழிக்கப்—பொற்கமல

வேதன் கலங்க விரிந்த கதிரிரவி
சீத மதிசுழலச் சேருடுக்க—ளேதமுற்றே

பாரி லுதிர்ந்துவீழப் பண்ணவர்க டானடுங்க
வாரிதியுந் தத்தளிக்க மாநிலத்தோர்—சூரடைந்து

காதிற் பிரளயம்போற் கேட்டுக் கலக்கமுற
மாதிரங்கள் யாதோ வெனமயங்கச்—சோதிவண்டார்

மும்மதமு நெற்றி முகப்பொறியும் வெற்புகளை
இம்மென்முனம் பேர்க்கு மிருகொம்புஞ்—செம்மையுறுங் ௧௫௫.

தன்னிறையைப் போற்றார் தலையை மிதித்துருட்டும்
வன்மை மிகும்பாசக் கால்வலியும்—புன்மையென

எட்டுக் கரிகளையு மெட்டிப்பார்த் தேவ்லியைத்
தட்டு மழல்விழியுந் தாம்புழைக்கை—விட்டுயாக்

கங்கா சலமருந்திக் காட்டுக் கொழுங்கவட்டை
நுங்க வொடித்துழக்கி நுண்கரும்பின்—துங்கரசந்

தன்னைக் குடித்துத் தருக்கிக் கவளமுண்டு
பொன்னிழைபி னற்படாம் போர்த்தனவாய்த்—தன்மலையின்

முன்றிலுறு சேவகத்தின் மூரி முழக்கினொடுங்
கன்று மணியார் கரியுடையான்—வென்றியொடு ௧௬0.

சற்கீர்த்தி யட்டசம்பத் தாதி மணிநிதியம்
இற்கீர்த்தி சிந்தையுன்னு மிட்டசித்தி—சொற்கீர்த்தி

யாவு மளிக்கு மிலக்கணங்க டானமைந்து
கோவின் மனத்தின் குறிப்பறிந்து—பூவுலகும்

பொன்னுலகும் வாரிதியும் போயுலவும் வன்மைபெற்று
மின்னொளிபோன் மேனி வெளுப்படைந்தும்—உன்னதமாய்ச்

சித்திரத்திற் றீட்டவொண்ணாச் செவ்வி யுடலினொடு
பத்தி வரிசையுறு பற்செறிய்—எத்திசையும்

நாதஞ்சேர் வீரகண்டை நாற்கா லிலுங்கலிக்கச்
சீத விலாழி சிறுநதியாய்க்—காதமுற ௧௬௫.

மல்ல கதிமுதன்ம னோகதியா மைங்கதியுஞ்
சல்லாப மாய்க்காட்டிச் சாரிசுற்றி—வல்லபஞ்சேர்

சிங்கவர சேங்கக் கனைத்துச் சிரந்தூக்கிப்
பொங்கமுறு காற்குரத்தின் பூழியெழுந்—தங்கதிரை

மூடி மறைக்க முனைந்து நடம்புரிந்து
நாடியெதிர் நிற்கு நயப்பரியான்—பீடுபெறு

மேகக் குழாத்தில் விளங்கி முழங்கியண்டம்
ஏக விடிக்கும் இடிக்கொடியான்—மோகமுறு

மன்றல்கொடை வென்றியிவை மாட்சி தனைக்காட்டி
யென்றும் முழங்கு மெழின்முரசான்—பொன்றுத ௧௭௦.

வீரத்தாற் றுட்டர்களை வீட்டுமொய்ம் புண்மையாற்
றீரத்தா னீதித் திறமையால்—வாரத்தால்

சிட்டர்களைப் போற்றுஞ் செழுங்குணத்தான் மன்பதைகட்
கிட்டமுடன் வாழு மியற்கையால்—அட்டதிசை

யாரும் புகழு மமைதியான் மாதருமஞ்
சாருந் தகைமைத் தலைமையாற்—பாரதனில்

எல்லாருந் தன்பே ரிசைக்க விசைந்தமனச்
சொல்வரம்பி னிற்குந்தொல் லாணையினான்—அல்லகற்றுஞ்

சீத மதிபோற் செழுமையுடன் றண்ணளிசாரந்
தோதவொண்ணா நீழ லுயர்குடையான்—மாதவஞ்சேர் ௧௭௫.

காமதே னுந்தருவுங் கார்முகிலும் பின்னிடையத்
தாமகிழ்ந் தோகைபுரி தண்கொடையான்---மாமதியுங்

கொன்றை யரவறுகங் கூவிளநன் மத்தநதி
துன்றுகரந் தையாத்தி தும்பையெருக்---கொன்றுசடை

யீசன்மகிழ் தோழ னெழிலளகை மாநகரின்
வாச னிகர்த்து வளர்செல்வன்---தேசுமிகு

செந்நெல் கமுகுதெங்கு தேமா பலாவாழை
கன்னல்செழு மஞ்சள் கருணையொடு---தன்னினமாத்

துன்னும்பல் போகத் தொகுதிப் பலன்பெருகிப்
பின்னமின்றித் தாமே பிரியமுட---னன்னயமா கஅ0.

யாரு மளந்து கணித்தற் கரிதான
சீருடனே வெற்பின் றிரட்சியைப்போற்---பாருவக்கச்

சந்ததமுந் தந்து தழைத்து விரிவாகும்
நந்தாப் பெரும்பூமி நல்வளத்தான்---சிந்தைமகிழ்ந்

துய்யவந்தார்க் காக்குமியல் புண்மையினப் பேர்படைத்த
உய்யவந்தான் பேருரு முற்றருகே---செய்யவளன்

ஓங்கிப் பலனளிக்கு மொப்பிலா வூர்பலவும்
ஆங்கே யொருசே கரமாக---வாங்கியே

நாடு மதிக்கவுயர் நன்னெற் களஞ்சியமும்
மாடமும் மேலுயர்ந்த மாளிகையும்---பாடுறவே கஅரு.

வான மளாவ வகுத்தமைத்துச் சூழ்ந்திடுமத்
தானமதில் வாழுந் தகுங்குடிக---ளானவர்கள்

மாறுப்பே ரன்பினொடு வந்து பணியவா
ணேறுக வீற்றிருந் தின்பமுற்று---மீறுத

பேராணை யைச்செலுத்தப் பேணி யருங்கடமை
தாராள மாகவந்து தான்குவிய---நேராகக்

கண்டு களித்துமனைக் காரி யிருவருடன்
விண்டுவினைப் போல்வளரும் வேளாளன்---மண்டுவள

மிக்குப் பொலிந்து வியக்குங் கதிர்கணிறைந்
திக்கினத்தை மோது மெழிற்செந்நெல்---புக்கபலன் ககூ0.

மாக வரைசொரிந்து மல்கும் வரம்பிகந்த
ஈகை நலவழுக்கை யேந்தலான்——பாகமயில்

ஈசனூர் பெற்றத் தினம்போ னலநிறைந்த
பாச வெருது பலவுடனே——தேசுமிகு

பன்னிறத்த வொண்சாதிப் பாற்பசுவுங் கன்றுகளுந்
துன்னிப் பலுகுந் தொழுக்குழுவான்——மின்னியொளிர்

மாமணியால் வச்சிரத்தான் மன்னுங் கருநீலத்
தூமணியாற் பச்சைத் தொகுதியால்——வாமமிகு

கோமே தகத்தாற் குளிர்பதும ராகத்தாற்
பாமேவு செம்பவளப் பல்கணத்தாற்——கோமேவு க௯௫.

வெண்டாளக் கூட்டத்தான் மேவுவயி டூரியத்தாற்
றண்டளிர்க்கு நற்சந்த்ர காந்தத்தாற்——கொண்டமைத்த

பித்திகையுஞ் சாளரமும் பெற்றிப் பெருந்தளமுஞ்
சித்திரத்தூண் விட்டச் செறிவுகளும்——பத்திகளும்

போதிகையு மேன்மாடிப் பொற்பு மணிமாட
வேதிகையுந் தொங்க விடுசரமுஞ்——சோதியொளி

மண்டு மலங்கார மண்டபமுஞ் செந்தமிழோர்
அண்டு நிழலா மரசிருக்கை——கொண்டுதிகழ்

சிங்கார மண்டபமுஞ் சேர்ந்தபல கட்டுகளும்
பொங்கமுறு பள்ளி யறைப்பொலிவும்——எங்கணுமே உ00.

அல்லிருளை யண்டவொட்டா தப்பா லகற்றுவிக்கும்
எல்லொளிபோற் பல்லொளியார்ந் தேகமாய்——வில்லுமிழும்

தேசு திரண்டு செறியவே பார்த்தவர்கள்
பேசு மியல்பிற் பெருவளனும்——மாசகன்ற

விண்டலத்தார் தந்த மிருக்கையென மேனிலைகள்
கொண்டிலவு முன்னதத்தின் கொள்கையும்——எண்டிசையும்

பாயொளியாற் பச்சைப் பரித்தே ரவன்றனது
சேயொளியின் றேசதுவுந் தேறவொண்ணா——தாயொளிமிக்

கேய மலர்மாத ரெண்மர் களுங்கனிந்து
நேயமுடன் கோயில்கொளு நீர்மையும்——தூய உ0௫.

மதியுடையோ ருள்ளம்போன் மாசின்றி மேலா
யதிகசீ ருஞ்சிறப்பு மார்ந்து—வதிவுதரும்

எந்நிலையு மிந்தநிலைக் கீடோ வெனப்புலவர்
சொன்னிலையைக் கொண்டுவளர் தோற்றமுள—நன்னிலையைப்

பண்பாய்ப் பொருந்திப் பகலிரவும் மூடாத்
தண்பவளப் பொற்சதவந் தான்மைந்து—விண்புவியின்

போகமெலாந் தந்து புகழ்போல் வளர்ந்துயரு
மாக மளாவு மனையுடையான்—மாகவள

முண்டு களித்துலவு மும்பற் பெருமுழக்கும்
அண்டு பரியி னதிர்கனைப்பும்—கண்டெவருஞ் உக0.

சென்று சிறப்படையத் தீவிரமாய்ச் செல்கவென
நின்றுபலர் சாற்று நிறைமுழக்கும்—குன்றாத

வீரராங் காளையர்கள் மேன்மைகொட் டாமனின்றே
ஆரவா ரஞ்செய் யதிர்முழக்குந்—தீரமுடன்

ஈட்டி யெறிவேல்வா ளெய்யுங் கொடுங்கணைகள்
பூட்டிவில்லுந் தாங்கிப் பொருகரிபோன்—மேட்டிமையாய்

ஆசார வாச லமர்ந்திறைவ னாணைதனைக்
கூசாம லாளுங் குறிகாட்டி—நேசமுடன்

தத்தம் பெருமை தனையுரைக்கும் பேரொலியுங்
கத்திகையிற் கொண்டோர் கனைப்பொலியும்—பத்தியதாய்ப் உகரு.

பல்வாக னாதிப் பரப்பி னமரொலியும்
மல்வீரர் கூடி வழுத்தொலியும்—வில்லொளிசெய்

கைப்பிரம்பர் கஞ்சுகியர் கைதூக்கி மன்னுவென்
றெப்போது மெச்சரிக்கை யேத்தொலியும்—இப்புவியில்

பாவலர்க ணாவலர்கள் பாடகர்க ளாடுநர்கள்
ஆவலொடு சேர்ந்தே யவரவர்க்குத்—தேவையுள

எப்பொருளும் பெற்றதிக வெக்களிப்பாய் வாழியெனச்
செப்ப மொடுதிரும்பிச் சென்முழக்கும்—மைப்படியுங்

கண்ணார்கள் மங்களச்சொற் காளாஞ்சி யேந்தொலியு
மண்ணாளு மன்னர் வருமுழக்கும்—பெண்ணாளும் உஉ0.

பாக னடியார்கள் பாரமனைக் குள்ளடைந்தே
பாகவன்ன முண்டு படர்முழக்கும்—மோகமுடன்

வெவ்வே றிரவலர்கள் விண்புகழ்கன் றெனவே
செவ்வனே பொன்னேற்றுச் சென்முழக்கும்—ஒளவியமில்

மேலாங் குடிகளெலாம் வேண்டிக் கடமைகளைச்
சீலமுடன் சேர்த்துத் திகழ்முழக்கும்—மாலானோர்

தம்மை யறிந்திறைவர்ச் சாற்றித் துனியகற்றிச்
செம்மைசெய் வாயில் செலுமுழக்குங்—கும்குமென

மத்தளமுந் தாத்தியும் வாய்வீணை தாளமும்
ஒத்துநட மாதர்குழா முன்னதமாய்ப்—பத்திபத்தி உஉரு.

யாகநின்று கைகோத் தரசின் புகழ்விரித்து
மோகமுடன் பாடி மூயன்றுநடம்—நாகர்பதி

வாழூர் வசியரம்பை மாமே னகைகூந்தற்
றுழேர்தி லோத்தமைபோற் றுனடிக்கும்—போழ்திலெழு

கான்முழக்குங் கைமுழக்குங் கண்டத் தெழான்முழக்குந்
தேன்முழக்கு மொன்றாகிச் சென்முழக்கும்—வான்முழக்கும்

வாரிதியு வாமுழக்கும் மற்றெப் பெருமுழக்கும்
பாரதனிற் றேற்கும் படிமுழங்கி—வார்விசித்த

மங்கலஞ்சே ரின்னியங்கள் மாறும லேமுழங்கச்
சங்க முழங்கித் தமிழ்முழங்கப்—பொங்கமொடு உஙo.

பூரணகும் பங்கள் பொலிய வலங்கார
தோரணங்கள் துன்னத் துவசங்கள்—தீரமொடு

விண்ணி லுலாவ விளங்கித் திகழ்ந்ததிக
புண்ணியஞ்சேர் வாசற் பொலிவுடையான்—எண்ணமைந்த

துய்யமணி மண்டபத்தி னுப்பண் டலங்கொளிசேர்
செய்யகன கத்திறற் செய்தமைத்து—மையகன்று

சாற்றுநவ ரத்தினமாஞ் சாதி மணிகளையே
யேற்ற முடனே யிழைத்தழுத்தி—ஆற்றன்மிகு

பொன்னரிமான் றாங்கு மரசிருக்கை யிற்பொலிந்து
மின்னும் புகழ்வெண் குடைநிழற்ற—உன்னரிய உஙரு.

சித்திரம்போன் மங்கையர்கள் செய்ய விணைக்கவரி
நத்தியிரு பாலு நனிவீசப்—புத்திமிகு

சொல்லிளைஞன் சண்முகன்பிற் றோன்றலா மாறுமுகச்
செல்வரிரு பாலுஞ் சிறந்திருக்க—வெல்வலிமை

வாசகனு நற்சாமி நாத மகிபனன்பாய்
தேசின்முகம் பார்த்துத் திகழ்ந்திருக்க—மாசகன்ற

தன்னிறையி னுள்ளம்போற் றானே பணிபுரிந்து
சொன்னிறையைக் காத்துமனத் தூய்மையுடன்—எண்ணிறந்த

பொற்பை தனைத்தாங்கிப் பூமா னுரைநோக்கி
மற்புயனு நற்பூ வணலிங்கன்—செப்பமுடன் ௨௪0.

தானே யமர்ந்தருகிற் சார்ந்துநிற்க வன்றலர்ந்த
பூநேர் முகமும் பொலிந்துதிகழ்—மீனேறி

ஆடுகொடி மார னருச்சுனனைப் போலழகன்
பீடுபெறு சொக்கலிங்கப் பேர்வணிகன்—நாடுமன்பு

நேடிக் களிப்புடனே நேர்ந்திருக்க நல்லாரைத்
தேடிப் பழகுந் திருநலத்தான்—கூடிப்

பிரியா மனமுடையான் பேச்சிற் சமர்த்தன்
மரியாதை யிற்சிறந்த மாண்பிற்—பெரியவழி

தன்னி லுதித்தோன் றமிழிற்பே ரன்புடையான்
பன்னுபெரு வித்துவநற் பத்தியுளான்—மன்னுமுயர் ௨௪௫.

வான நமதுசிவ மார்க்கந் தனைநாளும்
ஞான மொடுதுதிக்கு நன்மதியோன்—மானபரன்

சித்தஞ் சலியாத சீர்வாய்ந்த நற்புலமை
முத்துச் சவாதுப்பேர் மூதறிவோன்—புத்திமிகு

சாந்தன் மகமதுச வாதுச்சேய் தன்னுடனே
யேய்ந்த வவையி னினிதமர்ந்து—வாய்ந்ததிசை

போற்று மெழிலிலங்கு பூபதியின் சீர்த்திதனை
யேற்றமொடு சாற்றி யினியதமி—ழாற்றலுடன்

பாமாலை சூடிப் பரிந்து களித்திருக்க
நாமகளின் மாகருணை நன்குபெற்றுத்—தேமதுர ௨௫0.

வாசகமுங் கல்வி, வளமும் வடமொழியும்
நேசமுட னல்லோர்பா னீடுமென் புங்—கூசுமனப்

பெற்றியுஞ் சொற்சுவையும் பேசும் பொருட்செறிவும்
பற்று மலங்காரப் பாவினத்தை—உற்றவள

ஞக்குந் திறனு மரனடியிற் பேரன்பும்
ஊக்கமு மேலா யொருங்கமைந்து—தார்க்கிகஞ்

செய்வலிமை யெண்ணித் திகழ்ந்து நமதுரிய
செய்யமால் ராமநா தேந்திரற்கு—வையமிசைச்

செய்ய கலைபயிற்றுஞ் சீலன் விசுவகுல
துய்யனுயர் வானசொன்ன பாரதிப்பேர்—மெய்யன்பால் உநிரு.

தந்தலைவ னுக்கினிய சந்தப்பா மாலைகிதஞ்
சிந்தைமகிழ்ந் தேபாடிச் சேர்ந்திருக்கச்—சந்ததமும்

ஆன்றநூற் கேள்வி யறிவோர் பலர்சூழ்ந்தே
ஏன்றமனு நீதி யிசைத்திருக்கச்—சான்றோர்

மதிக்கும் புகழினொடு வைபவத்தைப் பார்த்து
நிதிக்குப் பெரியோனு நேர்ந்து—கதிக்குமொளித்

தாரகையி னூடே தழைத்தோங்குஞ் சந்திரன்போற்
சீராக வாழுஞ் சிறப்புடையோன்—பாராண்ட

பாண்டியர்க்குச் சீமை பரிவாக வாண்டளித்தும்
மாண்டிகழு மாதீனத் தார்மகிழ—வேண்டியவா உஙo.

றிப்பதியைக் காத்தே யினிதளித்தும் மேலானோர்
செப்பியவா றேபூமிச் சேகரத்தைத்—தப்பின்றி

ஆண்டு கொடுத்து மதன்பிறகு நற்றேவை
ஆண்டிருந்த சேது பதியரசர்—சேண்டிகழுங்

கீர்த்தி மலியுங் குழந்தைப் பதிக்கெவுரிப்
பார்த்திப ராதியாய்ப் பார்புரந்தோர்—சீர்த்தி

வழிவழியா மன்னர் வகைகயோர் மகிழப்
பழியொழிந்த திண்டோட் பலமுந்—தழைய

வடவேங் கடத்தான் மலரடியில் வைத்த
திடமான பத்தித் திறமுங்—கடங்கவிழ்ந்த உஙரு.

வெள்ளானை யேறும் விமலனா நல்லுடையான்
கள்ளொழுகும் பூவார் கழல்பதித்த—தள்ளரிய

பத்தித் திறத்துப் பயனுங் கடைப்பிடித்தே
எத்திசையும் நற்புகழ்ச்சி யேறியே—நத்தியநற்

பாரரசர் மாற்றார் பகையைக் களைந்தொழித்தும்
தீரமொடு வேங்கைபுலி யைச்செறுத்தும்—கோரமுடன்

மன்னர் சினந்து மலர்க்கரத்திற் காலதனிற்
றுன்னி யிடுந்தளையைத் தூளாக—உன்னுமனப்

பத்தியாற் போக்கிப் பலன்காட்டி யேதிகழ்ந்தும்
சுத்தவைதீ கச்சைவத் தூநெறியில்—வித்தகராய்க்

கண்ணிழந்த வந்தகர்க்குக் கண்கொடுத்தும் மாற்றாரான்
மண்ணிழந்த பேர்களுக்கு மண்கொடுத்தும்—எண்ணிறந்த

காட்சி பலவமயங் காட்டியும் பாரின்மிகு
மாட்சியுட ணார்க்கும் வணங்காராய்—ஆட்சிசெய்த

பீடுபெறு மன்னர் பெருந்தவரால் வன்பாண்டி
நாடுமதித் தானென்ற நற்பேரும்—தேடுந்

திறைகொண்ட சொற்பெரியான் சின்னாண்டி வீரம்
இறைகொள் சிறுக்கொந்தி யேன்றே—அறைதலொடு

வேண்டாத் தலையன் மிகுவீர சாண்டிபன்பல்
லாண்டுபஞ்சந் தாங்கி யடற்பேரும்—பூண்டிறைமார்

தத்தமது பேரைத் தகுதியுடன் சாற்றிடவே
அத்தகுதிப் பேரு மணிந்துபேர்—வித்தைமதி

நாடும்ரெகு நாதநல்ல தம்பிஉடை யார்முத்து
நேடும் விசய ரெகுநாதன்—தேடும்

விசய ரெகுநாதன் மேலான தீரன்
வசையிலா முத்து வடுகன்—இசைநாத

நல்லதம்பி நல்லுடையார் நன்மொழியால் யாவரையும்
வெல்லும் விசய ரெகுநாதன்—புல்லுஞ்

சவுமியநா ராயணன் முத்து வடுக
நவநாத நல்லதம்பி நல்ல—தவமேவு

நல்லுடையார் நல்ல கருப்பன் பிரதாபச்
சொல்வலிமைச் சுப்பையா சேருவையும்—வெல்வலிமை

வீர மிகுதீரம் வேண்டாரை வேண்டாத
சூரத் தனமதிக சொல்லுறுதி—பாரக்

கருணை கனநீதி கண்ணபிரானன் பத்தி
தெருண்மிருந்த ஞானச் செறிவும்—பொருண்மீதில்

இச்சையில் லாச்சிந்தை யெங்கும் புகழ்ப்பரப்பு
விச்சை யுணர்வு மிகுதியுடன்—எச்சமையும்

விஞ்சும் வசன மிகுசிறப்பும் வேண்டாதார்
கெஞ்சும் பெருமைக் கெழுதகைமை—வஞ்சம் ௨௮௫.

உடையாரைக் காயு மதுகைநல்ல தம்பி
உடையா ரெனும்பேரை யுற்ற—கொடைவள்ளல்

ஆதியாம் பட்ட மனேகந் தரித்துமின்னும்
ஆதி யரசரா தீனத்தார்—நீதியுடன்

வென்றி விறல்வலியும் வீரங் கடவுணெறி
ஒன்றும் பெருமை தனையுன்னி—யென்றும்

அழியாப் பொருளா யளித்த விருதுக்
குழுவினையான் கூற வலனே—பழியில்லாக்

காவிக் கவிகைசெண்டா கற்சிவிகை வெண்கவிகை
மேவிப் பொலியுபய வெண்கவரி—பூவில் ௨௯௦.

உயர்வெனவே சாற்று ருடபயதீ வர்த்தி
துயல்வருமீன் றோரணமீ யொட்டி—அயலருகார்

பொன்னிடைக்கம் பொற்பீலிக் குஞ்சம் புலிக்கொடியும்
மன்னு மரவக் கொடிமகரம்—துன்னுகொடி

சிங்கக் கொடியனுமத் தீரன் கொடிகெருடத்
துங்கக் கொடியிடபத் தூயகொடி—மங்கலஞ்சேர்

ஐந்துவன் னக்கொடியோ டானபதி னெட்டுவிரு
தந்திறனே டேற்றே யுயர்வடைந்து—நந்தலிலாப்

பட்டம் புனைந்திந்தப் பாரினிலெச் சாதியருந்
திட்டமொடு சாமியெனச் சீர்பொருந்தி—மட்டில்லா ௨௯௫.

தாரு நிகரின்றி யாருமிறை யோரிறைமைச்
சீரும் பொருந்திச் செழிப்படைந்து—பாருவக்க

எப்பொருளு மெந்நலனு மெத்திறனும் பெற்றதிக
செப்பமுட னோங்குஞ் சிறப்புடனே—ஒப்புவமை

சாற்றவொணு விந்த்ரகுலத் தாரின் சனசமுகம்
ஏற்றமொடு வாழு மெழில்பொருந்தி—ஆற்றன்மிக

நீடும் பிரபலஞ்சேர் நேர்மையுறு குன்னமா
நாடுமதிக் கும்பெருமை நன்குடையான்—ஏடவிழும்

பூங்கா நிறையுமந்தப் பொற்புமிகு நாட்டினைச்சேர்ந்
தோங்கும் பலவளங்க ளுற்றுயர்வாய்த்—தேங்கமழு ௩௦௦.

மாபலா வாழைதென்னை வண்கமுகு தண்கரும்புக்
காபலவுஞ் சூழ்ந்து கவின்றரவே—பூமலியும்

செஞ்சாலி யாதிச் செழும்போக நற்பலன்கள்
விஞ்சிநிறை நீரான் மிகுந்தோங்க—அஞ்செறியும்

பொற்புநிறை வேப்பங் குளப்புத்தூர் தன்னிலுறை
கற்புநிறை யிந்த்ரகுலக் கர்த்தனு—யற்புதமா

ஐந்தடக்கும் வீர னருணிறைந்த மெய்ஞ்ஞானி
உய்ந்தடங்கு நன்னெறியே யோர்ந்தனனாற்—பைந்தமிழ்க்கோர்

சிங்கமுய ரில்லறத்திற் சீமா னறுமுகவேட்
செங்கமல பாதஞ் சிரமணிந்தோன்—துங்கமுறு ௩௦௫.

நற்பூதி சாதனத்தை நன்று யறிந்தடைந்தோன்
அற்பூருஞ் சிந்தை யழகுடையோன்—கற்போரும்

யோகியரும் வேறாக நோற்றோரு நோற்பவரும்
ஆகி யனவரத மாங்குறவே—மோகமொடு

பெற்றோ ரினிப்பெரிய பேறுவே றில்லையென
உற்றோ ருலகிற் கொருவன்மற்—பற்றில்லாச்

சின்மயநற் றேசிகனுர் செல்வனரு ளற்புதல்வன்
தன்னியல்பிற் சத்துவத்தே தான்றோன்றி—நன்னயஞ்சேர்

சத்திய மேவாய்ந்து சாற்றுகப டொன்றில்லாப்
புத்திதனின் மாறாத பொற்புடையான்—சத்துருவும் ௩௧௦.

நேயரென்றே கொள்வா னிறைதவறான் றீமைதனிற்
றோயான் மனவிரக்கந் தூய்மையுள்ளான்—மாயா

சகத்திற் பொருந்தான் றடவலிமை வீமன்
நகத்தைப் பொருபுயத்து நம்பி—அகத்தில்

வருவிருந் தோம்பி மறுவிருந்து நோக்கும்
அருமருந் தன்னவுய ரண்ணல்—திருமருவு

மாமனையா னல்ல மகப்பேற்றா னற்றவத்தான்
காமனையே வென்ற கவினுடையான்—பூமன்

சிருட்டிக் கொருவன் செகத்திற் கொருவன்
தெருட்டிப் பிறரைச் சிறந்தான்—இருட்டிற் ௱௰௫.

கொருசோதி யைப்போ லுலகர்மெச்ச வாழ்வோன்
இருசோதி யேந்தரன்பா லிட்டன்—வருசோதித்

தன்மை யுடையான் றழைக்கு முயர்மேழி
நன்மை யுடையா னலமுடையான்—புன்மை

அறியாத வுள்ளத் தழகன் மனைவந்த
வறியாரைக் காக்குமுயர் வள்ளல்—சிறியார்

பெரியாரென் றுன்னிமறு பேதமுறை காட்டா
மரியாதை யுள்ளகுண மானி—தெரியாத

பேர்க்குந் தெரிந்தார்க்கும் பேச்சொன்றே யன்றியிப்
பார்க்கு ளுரைதிறம்பாப் பாங்குடையான்—யார்க்குமே ௱௨0.

நல்லவனுஞ் சோணைமுத்து நாம நயந்தோன்பால்
எல்லொளிபோல வந்த வெழின்மிகுசேய்—மல்லன்மிகு

மாறனரி மர்த்தனன்றன் மந்திரியை யன்ஞேன்பாற்
பேறடையப் பொன்கொண்ட பேருருவை—மாறடையா

நற்பரிகள் வாங்க நடந்த பெருந்தகையை
அற்பகுண மாகாத வண்ணலைப்—பொற்பிற்

பெருந்துறையைச் சார்ந்து பெருமானைத் தாழ்ந்து
பெருந்துறையை நாடிப் பிறங்கிக்—குருந்தடியிற்

சற்குருவா யீசனைக்கொள் சற்குருவைப் பாண்டியன்றன்
பொற்குவையாற் கோயில்செய்த பூசுரனை—அற்புதமாம் ௱௨௫.

வாசகத்தைப் பாடு மழைமுகிலை யீசன்மணி
வாசகவெ னப்புகழு மாமணியைப்---பாசமறுத்

தானந்த மான வருள்வடிவை யுண்மையறி
வானந்த வுண்மை யறிந்தானைத்---தேனுந்து

கொன்றையா னைக்குதிரை கொண்டுவிற்குஞ் சேவகனுப்
அன்றுவரச் செய்தவெங்க ளாண்டகையை---நன்றும்

பரிக ளருமாறப் பாண்டியன்றன் கோபம்
இரியக் கொடுந்துன்ப மேக---விரிதிரைபாய்

வையைப் பெருக்கடங்க மாநக ரைக்காக்க
மையகன்ற வந்தி மயக்கமறச்---சையமகள் ௱௩௰

பாகம் பிரிந்த பவளத் திருமேனி
ஆக மறைத்தே யழுக்கடைந்த---ஏகனவ்

விண்சுமக்கு மாமுடியின் மீதுகழை வேய்ங்கூடை
மண்சுமக்க வைத்தபெரு மாதவனைப்---பண்சுமக்கும்

சொல்லிதரு மண்டத் தொகுதிதொறும் பட்டிடவே
அல்லிகழுங் கண்டத் தரன்முதுகில்---ஒல்லெனவே

மாறன் பிரம்படியை வாங்கவைத்த காரணனை
மீறு மிருள்கடந்து மேவுநல்---லாறடைந்து

தில்லைவனஞ் சேர்ந்து சிவயோகத் தேயமர்ந்து
தொல்லையிரு ணீத்த சுடரொளியைப்---பொல்லா ௱௩௰௫.

அழுக்கா றடைந்தெம் மரனைப் பழிதந்
திழுக்காற்றின் மேவி யிறுமாந்---தொழுக்கமிலாப்

புத்தர்களை வாதிற் புறங்காட்டக் கண்டானைச்
சித்தியென மூகைச் செயல்போக்கிப்---புத்தமகட்

கன்னிகைக் கீசன் கவினைவிடை யாயுணர்த்தி
மன்னுசிவ நன்னெறியின் வாய்ப்பானைத்---துன்னுமெழிற்

பாவை யுரைத்த பவளத் திருவாயாற்
கோவையுரை யென்னக் குறிப்பறிந்து---மால்விடையான்

உள்ளங் களிக்க வுறுதிப் பொருள்பயக்குந்
தெள்ளமுதச் சொற்கோவை செப்பவே---பிள்ளைமதி ௱௪௰.

வைச்ச சடையான் மலர்க்கரத்தாற் றீட்டித்தன்
கைச்சாத்துங் காட்டக் கதியளிக்கும்—விச்சைத்

திருவா சகமுந் திருக்கோவை யாரும்
ஒருவா சகமெனவே யோதும்—பெருமைதனை

அன்றுநமக் கீந்த வருட்கடலைச், சிற்சபையில்
ஒன்று பரவெளியி னூடுகலந்—தொன்றித்தான்

றானே விளங்குந் தனிமுதலை மெய்ச்சமயக்
கோனான வெங்கள் குருமணியை—ஆனேறும்

அண்ணற் கினித்த வடிகளையெம் மானுடைய
வண்ணச் சிகாமணியை வானோரும்—எண்ணரிய ௱௪௫.

மாணிக்க வாசகரை வாதவூர் வந்தாரைப்
பேணிக் கரங்கூப்பிப் பேசரிய—காணிக்கை

யாக வுடல்பொருளு மாவியுமே யொப்புவித்துச்
சோகஞ் சிறிதுமின்றி வாழ்தூயன்—மோகமுறும்

பாரின் நிலையாமை பார்த்துப் பயன்கருதிச்
சீரி னொழுகுந் திறனுடையோன்—பேருடைய

தொண்ட ரடிப்பொடியே தூய நறுமலராய்க்
கொண்டணியுங் கொள்கைக் குணமுடையோன்—வண்டரிடம்

அண்டாத சேயோ னடியர் பெரும்புகழைப்
பண்டைமுறை யாகப் பரிந்துரைப்போன்—அண்டர்பதி ௱௫0.

காத்தருளுஞ் செவ்வேட் கடவு டிருவடியை
நாத்தழும்பு காண நனிதுதிப்போன்—பூத்திலங்கும்

வெண்டா மரையிலுறை மெய்ஞ்ஞான வாணியிரு
தண்டா மரைப்பதங்க டாங்குவோன்—கண்டினிய

தேன்பாலுந் தோற்கச் செறிந்ததிரு வாசகநற்
றேனருந்து செல்வச் செழுந்தவத்தோன்—ஊனடைந்து

தோன்று முடம்பி னுறுதியெனத் தொல்பதஞ்சேர்
ஆன்றமணி வாசகத் தன்பினோன்—மாண்டநல

உள்ளமே யுள்ளமென வுண்மைக் குறிகொண்டு
கள்ளமின்றி வாழுங் கருத்துடையான்—தெள்ளியசீர் ௱௫௫.

ஆகும் பலகலைக ளாய்ந்துமனச் செவ்விபெற
யோக முடன்பயில முன்னிற்பான்—சோகமதை

நீக்கும் பெரிய திருநீற்றுத் தொண்டின்வழி
ஆக்கும் பயன்கொ ளருட்பாலன்—பாக்கமழுஞ்

செய்யவா யாண்டவனுஞ் சீராரு முத்தையப்பேர்
எய்திவளர்ந் தோங்குமெம் பாவலனை—ஐயகன்ற

உள்ளமொடு மன்னு முயிர்போலக் காத்தோம்பிக்
கொள்ளும் பெரிய குணக்குன்றம்—சொல்லுமந்தப்

பாவலன்கை யேற்ற பணிமுடிந்து பேறுடைய
மேவி விருப்பான் மிகுதியை—ஆவலுடன்

ஈந்துயிரு மானமு மேம முறக்காத்த
சாந்தகுணம் வாய்ந்த தனிவள்ளல்—வாய்ந்தினிமேன்

மற்றோரை வள்ளலென வாயாலப் பாவலவன்
உற்றுரையா வண்ண முதவினோன்—பற்றிநித

நண்பி னினத்தி னணிசிறந்தண் ணுமென்றே
அன்பி னழைக்கு மமுதுரையான்—தன்பெருமை

ஒன்றையே கொண்டோங்கு மொப்பில்லாக் கோசிகனார்
அன்றுசெயும் வேள்வி யதைக்காத்த—மன்றல்கமழ்

தாரா ரிராமனிவன் றானென்று லிப்பெரியோன்
சீரான பாவலவன் செய்வேள்வி—நேராகப்

பேணியே காத்தல் பெரிதாமோ பார்புகழக்
காணிவன் வண்மை கவினுடைத்தே—பூணிலங்குஞ்

சேரர் தமிழின் செழியர் புகழ்வளவர்
பாராளுங் காலம் பலகலைஞர்—சீராகப்

பாடிப் பரிசில்பெற்ற பான்மைதனை நூல்வழியாற்
றேடிப்பார்த் தன்றோ தெரிந்தனமால்—மூடமின்றி

எல்லோருங் காணு மிவன்கொடையைப் பேசுதற்குச்
சொல்லா யிரநாவோன் றோன்றலோ—முல்லைக்

கொடிக்குத்தே ரீந்துங் குளிர்ந்த மயிலுக்
குடுத்தாடை யோரா தவந்தும்—படுத்தசீர்த்

தம்பி மகிழத் தலைகொடுத்தும் பாவலரை
வெம்பு மிடியகற்றி மேவியசீர்ப்—பண்பெல்லாம்

செய்தல் கொடைமடமாந் தேறிப் பயனுணர்ந்து
செய்தலன்றோ வள்ளற் றிறனாகு—மெய்தபுக

ழேறு மிராமநா தேந்த்ர னெழிற்கொடையே
யாறுணர்ந்த தென்றீங் ககமகிழ்வேந்—தேறுமதி

வள்ள லிவன்காண் மகிதலத்தி லம்மரபன்
உள்ள வுளக்கு முயர்வுடையோன்—ஒள்ளொளியி

னாலே யிருளை யகற்றும் பரிதியைப்போற்
காலேயு நல்குரவாங் காலிருளைச்—சீலமுளோர்

தம்பா லணுகா துதவுந் தருவனையான்
முன்பு தவமுடித்த மூதறிவோன்—செம்பொன்

பெறும்பே றறக்கென்றே பேசுதன்மட் டாகா
துறுஞ்செயலிற் கண்டே யுவப்பான்—மறங்கடிந்த

மற்றோரிவ் வள்ளலைப்போல் வண்மை யுயர்நலத்தைக்
கற்றோரா ரிங்கெனக்குக் காட்டுநெஞ்சே—கொற்றமிகும்

எம்மிறையா மால்ராம நாதேந் திரனீண்டுச்
செம்மையுறு வள்ளற் சிறப்புடையோன்—வெம்மையென்ப

தெவ்வளவுங் காட்டா விதயத்தோன் கற்றுநிறைந்
தௌவியமில் லாரையே யாதரிப்போன்—செவ்வியுறு

மாலை யிலங்கு மணிமார்பன் மாறடுவெவ்
வேலை யிலங்கு மிளிர்புயத்தோன்—சாலநெடும்

பொற்பா ரரசு புரியு மளகேசன்
இற்பெருக வாழு மெழினலத்தான்—அற்பினொடு

பக்கத்தார் சூழப் பவனிபல காற்போந்தவ்
வொக்க லுடனமரு மோர்நாளிற்—றக்கோரால்

நாடும் பெருமை யிராமநா தேந்திரயால்
நீடுபெறு பொய்கை நிவந்தாடி—ஆடகச்சீர்ப்

பொற்சரிகை யாடை புனைந்து திருநீற்றை
அற்புடனே நெற்றித் தலத்தணிந்து—விற்புருவத்

தூடே திலத மொளியிலங்கத் தென்பொதியக்
கோடுதரு சந்தநறுங் குங்குமப்பூ—நாடுபச்சைக்

கற்பூர நானங் களபந் தருபுனுகு
அற்பூரு மித்தனையுஞ் சேர்த்தரைத்துப்—பொற்பிற்

செழுங்கலவைச் செஞ்சேற்றை மெய்யதனிற் சேர்த்து
ஒழுங்குபெறப் பூசி யுவந்தே—அழுங்கலிலாக்

கண்ணிமையா வாரோருங் காதலிக்கக் காதிரண்டின்
கண்மரக தக்குண் டலங்களிட்டுப்—பொன்னியரேர்

கண்ட சரங்கனக மாலை மகரகண்டி
வெண்டரள மாலை வெயில்வீசி—மண்டொளிசேர்ந்

தேற்ற நவமணிக ளேறும் பலபதக்கஞ்
சாற்று மதாணித் தனிப்பதக்கம்—ஆற்றன்மிகு

வாகு வலய மருவுகே யூரமொளிர்
மோகனக மாலை முதலாய—வோகையுடன்

மார்புதோள் மீதின் மருவ வணிந்துகொடை
ஆருங் கரத்தி னழகாகச்—சேர்தரவே

வில்லுமிழ் பொற்கடக கங்கணங்கண் மேவவிட்டு
வல்லகணை யாழி மகிழ்ந்தணிந்து—கல்லிழைத்த

பட்டை யரைஞா ணிடையிற் பரிந்தணிந்து
துட்டர்மன மஞ்சுங் குறிதோன்றுந்—திட்டமுள

வீரக் கழலை விளங்கு மிருபதத்திற்
சேர விசித்துச் செறியவிட்டு—மாரனெனச்

சிங்கார மாகச் சிறக்க வணிந்துருவம்
பொங்கெழில் காட்டிப் பொலிவுபெற—அங்கமுயர்

கன்னியர்கண் மோகக் கடற்கட் படிந்துகவின்
நன்னயமாய்ப் பார்த்து நனிமகிழப்—பொன்னிழையால்

ஏய்ந்த புதுவாடை யேந்தித் தலைப்பாகை
ஆய்ந்துகட்டி முத்துத் தூராயணிந்து—காந்திமிகு

வீரவா டன்னை விசித்தங் குறையிலிட்டுக்
கார்ஞர்தி தங்குலத்துக் காளையெனப்—பாரறியக்

கற்பகப்பூ மாலை கனிந்துதிரு மார்பணிந்தே
அற்புதத்தோ டாங்கை யமர்பொழுதின்—மற்புனைந்த

திண்புயத்து மாலாகிச் சேல்விழியார் நோக்குகடைக்
கண்டிட்டி பற்றாது காக்கவெனப்—பண்பரவு

கொவ்வைக் கனிவாய்க் கொடியிடையா ராலத்தி
செவ்வைடா யேந்திநற் றிட்டிசுற்றித்—தெவ்வர்முடி

தாக்குந் திருத்தா ளடலரசே சந்ததமும்
ஆக்கமொடு பாரதனை யாண்டினிதாய்க்—காக்கவென்று

வாழ்த்த வமைச்சர் மறையோர்க ளாசிசொலக்
காழ்த்த கலையாற் கவிவாணர்—ஊழ்த்துயரை ௪0௫.

நீக்க வறிவு நிறைந்த புகழ்ச்சான்றோர்
வாக்கதனால் வாழ்த்து வழங்கநறும்—பூக்கமழு

மாலை யிலங்குகுல தேவதையை வாழ்த்தியயல்
வேலையென மேதினியோர் மேவிவரச்—சீலமுடன்

மாலா மிராமசா மிச்சேர்வை வண்மைமிகு
சீலவெள்ளைச் சாமி யெனுஞ்செல்வர்—கோலமுடன்

தாங்கிக்கை லாகு தரவும் வலப்பாதம்
ஆங்குமுன்னால் வைத்தே யடற்கரிபோ—லோங்கிநடந்

தெப்பொழுதும் மாறா தெழின்முரசு தான்முழங்கும்
ஒப்பில்லா வாசார வாசலுற்றுச்—செப்பமுறு ௪௧0.

பூமகளு மாமகளும் போல வெழில்பொலிந்த
காமர் செறியுமனைக் காதலியர்—தாமிருவர்

வானமுறு மின்போல் வணங்கு மிடையுடனே
மான வணிகள் வனைந்திலங்கத்—தேன்மொழியார்

தாங்குந் தனிச்சிவிகை யூர்ந்துமா றேவிகள்போற்
பாங்குடனே தன்னிரண்டு பக்கமதி—லோங்கியிரு

வல்லிக் கொடிநால் வகைமலரும் பூத்தணுகி
வில்லுமிழும் பச்சைமலை மேவியே—மெல்ல

வனைந்து படர்ந்தபெரு மாட்சியெனக் காட்சி
இணங்கத் தழுவி யிணங்க—அணங்கனையார் ௪௧௫.

தம்பிருவ ரோடுந் தடந்தேர் தனிலேறிச்
செம்மையுட னூர்ந்து செறிந்திலங்கிக்—கொம்மைமுலைச்

சீதேவி பூதேவி சேர்ந்தமரும் விண்டுவைப்போல்
மாதர் நிறையு மறுகிலுற்றுச்—சீத

மதிவதன மங்கைமார் மற்றுமுள்ளோர் சூழ்ந்து
வீதியி னமைந்து மிளிர்ந்தே—பதிமகிழப்

பக்கந் தனின்மருவிப் பாதுகாப் பாகவரத்
திக்கெட்டு மெட்டிச் செவிடுமண்டு—மிக்கவொலி

காட்டுந் தடாரிபம்பை கச்சரிநற் சங்கம்வென்றி
நாட்டும் முரசு நகார்திமிலை—மேட்டிமையார் ௪௨௦.

பேரி தவிலுடுக்கை பேசுங் குடமுழவு
வாரிலங்கு தோற்கருவி வாகாகச்—சீரிலங்கு

நாக சுரம்வீணை நல்லியாழ் வேய்ங்குழலோ
டாகத் தலைமயங்கி யற்புதமாய்—மேகமுழாம்

போல முழங்கிப் பொருகடலைத் தோற்கடித்து
ஞாலம் வியக்க நகர்ந்துவரக்—கோலமுறு

மங்கல கீத வரிசை யடுக்கடுக்காய்ச்
சிங்கார மாகச் செறிந்துவரத்—திங்கட்

குடைநிழற்ற வெண்சா மரைகுலவ மாதர்
இடையிடையிற் கும்பங்க ளேந்தத்—தடையிலையா ௪௨௫.

தேருமி னென்றே யெழிலால வட்டங்கள்
வாகாகக் கைவீசு மாறதுபோன்—மாகமெட்டித்

தானே யசையத் தனிமகர தோரணங்க
ளானிலங்க முன்னே யசைந்துசெலத்—தேன்மொழியார்

அம்பொற்கா ளாஞ்சி யடைப்பை தனையேந்திச்
செம்பதும மங்கையர்போற் சேர்ந்துவர—வம்பிறங்கும்

கஞ்சுகியர் கையோச்சக் கைப்பிரம்பர் வீசிவரக்
கிஞ்சுகவாய் மாதர் கெழுமையுடன்—அஞ்சிலம்பு

கூவிச் சிலம்பக் குதித்து நடம்புரிந்து
மேவி யிறைமுன் விரைந்துசெலத்—தாவுபரி ௪௩௦.

வீரர்களும் வாள்பிடித்த வீரர்களுங் காயிலைவேல்
வீரர்களும் வில்லேந்து வீரர்களும்—தீரமொடு

கொக்கரித்து மன்னன் குறிப்பின் படிநடக்கப்
பக்கத்தின் மாற்றோர் பணிந்துவரத்—தக்கபெருஞ்

சுற்றமும் நேயர்களுந் தோழருந் தம்பிறையைப்
பற்றித் தொடர்ந்து பரவிவரக்—கொற்றக்

கரியுடையான் வந்தான் ககனத் துலாவும்
பரியுடையான் வந்தான் பசும்பொன்—விரியுமணித்

தேருடையான் வந்தான் செறிந்தகா லாட்படையின்
சீருடையான் வந்தான் சிறக்கவே—தாரார் ௪௩௫.

மணிமார்பன் வந்தான் மணக்குந் துளபக்
கணிமார்பன் வந்தான் கரத்தின்—அணிதிகழும்

சங்காழி யான்வந்தான் றாரணியிற் செல்வமது
பொங்காழி கொண்டபூ மான்வந்தான்—மங்காப்

பெருமிசையான் வந்தான் பிறங்கவுயர் பேறு
தருமிசையான் வந்தான் றருப்போற்—பெருகுங்

கொடையுடையான் வந்தான் குறிக்கு மொழுக்க
நடையுடையான் வந்தா னனுகி—னடைவுடனே

காக்குங் கருணைக் கடல்வந்தான் காசினியைப்
பூக்குமயன் பூக்குபூ மான்வந்தான்—ஆக்கமிகு ௪௪௦.

நல்லாறூர் நாடன் நனிவந்தான் நாட்டமின்றிச்
செல்லாரூர் செல்லாத சேய்வந்தான்—மல்லன்மிகு

பூநகர்வா ழெங்கள் புகல்வந்தான் போகமுறு
மாநகர்வாழ் செம்மல் வழிவந்தான்—ஈனரையும்

ஆதரிக்குஞ் செங்கை யவன்வந்தான் ஆடகப்பூண்
மாதரிரு பேர்மருவு மால்வந்தான்—நீதமிகு

புத்திரசந் தானம் பொலியவந்தான் போற்றுமுயர்
மித்திரரைக் காக்குமெழில் வேள்வந்தான்—நத்திவளர்

சுற்றந் தழுவுஞ் சுதன்வந்தான் றாழ்வின்றிக்
கற்றவரைக் காக்குங் கடல்வந்தான்—கொற்றமதிப் ௪௪௫.

பேரறிஞன் முத்தையப் பேருடையெம் பாவலனை
ஆருயிர்போற் காக்குமண் ணல்வந்தான்—ஈரமிகு

கார்மேகன் வந்தான் கலையாத வென்றிடலை
யேர்பரவி ராமநா தென்னைவந்தான்—சீருடனே

யென்றுதிருச் சின்ன மியம்பி யவன்செவியில்
ஒன்ற வமுதம்போ லேயுகுக்க—மன்றல்டலை

வீராதி வீரா விசயா குமணாமற்
போராதி யிற்சிறந்த போரேறே—பாராளும்

மன்னா சிறந்த கலைவலா யோகைமிகு
கன்னா நிதியிற் கனதனதா—பொன்னொளிரும்

மார்பா திகழ்வச் சிரதேகா வண்டலம்பு
தார்மேய தோளா தடக்கையா—காரார்

கடல்வண்ணா நீதிக் கவினுடையாய் மாற்றார்க்
கடலேறு காட்சிக் கழகா—திடமுடைய

சீராம நாதேந் திரதீரா வள்ளல்களின்
பேரை நிலத்தவரும் பெற்றியாய்—மாரனே

யென்றுபல வந்தியர்க ளேத்தெடுப்ப ஆடன்மகள்
நின்று நடம்புரிந்து நேர்செல்லத்—துன்றும்

இடிக்கொடிவிண் டாவி யிலங்கக் கடல்சூழ்
படிக்குளுயர் வான பரிசான்—அடிபெயர்த்துத்

தேரைச் செலுத்திச் சிறந்த பவனிவருஞ்
சீராம நாதேந் திரதீரன்—தேர்முழக்குஞ்

சூழ்ந்த படைமுழக்குஞ் சென்றுதூ தாயுரைக்க
ஆழ்ந்த கருத்தன்ன வாரிருள்சேர்—தாழ்குழலிற்

பேடுவண் டூதிப் பிணங்குந் தொடைமலரின்
ஏடவிழச் செந்தே னிறைதுளியுண்—பாடளிகள்

போலவிழி யாதர்குழாம் பூந்தாரான் பொற்பினிலே
சால மயங்கித் தளர்நடையி—னாலெதிர்ந்து

செஞ்சந் தனக்குழம்பு தீய்ந்துதுக ளாயுதிர
நெஞ்சிலுறு மாரமணி நீறாக—விஞ்சுதனங்

கச்சைக் கிழித்தெனக்குக் காட்டென்று மேலெழும்பப்
பச்சை வளைகழன்று பாரில்விழ—அச்சமுத

லாதியா நான்கு மகன்றோட ஆடையிடை
நீதிரா தேநழுவ வேளரசிற்—கேதிருக்கை

அல்குல் புடைத்துவிம்ம அஞ்சிலம்பு வாய்திறந்தே
ஒல்கு மிடைமெலிந்த தென்றோத—மல்லன்முக

மீதுவேர் முத்துதிர விற்புருவந் தான்சுழிக்க
மாதர் விழிசிவக்க மையழியச்—சீதநறும்

தேனா ரிதழ்துடிக்கச் செஞ்சொன் மொழிகுழற
மீனேறு கேதனவேள் வில்லெய்தக்—கானேறு ௪௯௫.

மென்கணைகள் மூன்றும் விரைநதுமார் பிற்றுளைக்கத்
தன்கணாறு காமந் தலைக்கேறி—மின்கணைப்போற்

கூடிபிறை பேரழகைக் கூர்ந்த விழிகளினால்
நாடி விருந்தாய் நனிபுசித்துத்—தேடித்

தவஞ்செய்துங் காணக் கிடையாத் தவமே
நவமா யெதிர்தோன்று நாத—பவமதனிற்

சிக்கி யுழல்வார்போற் றீரமுள் மாரனிடஞ்
சிக்கியுழல் கின்றோஞ் சிறிதிரங்கி—மெய்க்கினிமை

தந்தணைந்து காமத் தடங்கடலி லாழ்ந்தவெங்கள்
சிந்தை மகிழ்சிறக்கச் சேராயோ—சந்ததமுங் ௫௱.

காத்தற் றொழிலுடையாய் காரிகையார் காவல்மிகக்
காத்தற் சிறப்பெனலைக் காணாயோ—ஏத்துயிர்மேல்

நெஞ்சிரங்க வேண்டாயோ நேரிழையே யெங்களது
நெஞ்சிரங்கும் பாட்டை நினையீரோ—தஞ்சமென்று

வந்தவரை யாதரிக்கும் வள்ளற் பெருந்தகையே
இந்தமுறை நன்றோ வியம்பிடுவாய்—முந்த

ஒருகுன்ற மேந்தியநீ யோவாதெம் மார்பில்
இருகுன்ற யேந்த லெளிதே—அருகொன்றி

ஆடையின்றி நீராடு மங்கையர்க ளாடையெலாந்
தேடிநறும் புன்னைதனிற் சேர்த்துவைத்துப்—பீடேனே ௫௱௫.

ஊதுங் குழல்கேட்டவ் வாய மொருங்குவந்து
போதுநீர் மேனிக் குறிபொத்தி—யீதழகோ

ஆடைதா வென்றிரப்ப வஞ்சலிசெய் தாற்றருவேன்
தோடணிந்த காதுடையீ ரென்றுசொல்ல—வேடவிழ்ந்த

மாலையணி கூந்தலார் வண்கயலைக் கைகூப்புங்
காலை மகிழ்ந்து கலையளித்தாய்—மால்படிந்த

எம்முடைய யாங்களே யீங்கே யினிதேற்றுச்
செம்மையுறுந் தேரதனிற் சேர்த்திடுவாய்—விம்முதனங்

காட்டிக் குறியதனைக் காட்டி யிருகரத்தை
நீட்டியுடை கேட்கவிது நேரமோ—சேட்படுநாள் சஅ0.

ஆலிலை யிற்றுயின்ற யாங்கதுபோ லெம்வயிறும்
ஆலிலையிற் றுயிற லாகாதோ—காலும்விடப்

பையரா விற்சயனம் பண்ணிலீ ரின்றெமது
மெய்யரா வின்சயனமேவுவீர்—செய்யவடி

வாரும் பதினா யிரத்ததிக வாய்ச்சியர்கள்
பேருவக்கச் சேர்ந்த பெருந்தகையோய்—வாருவக்குங்

கொங்கைதர வந்தேமைக் கொண்டணிகர் வண்கொடைநின்
செங்கையாற் றூங்கினிது சேர்த்தருகும்—பொங்குமுறப்

பக்கத் திருக்குமிரு பாவையருக் கஞ்சினையோ
சக்களத்திப் போராட்டந் தான்செய்யேம்—மிக்கொளியார் சஅரு.

சேமத்தே ரேறித் திருவுலா வந்தனையெம்
வாமத்தே ரேறி மகிழ்ந்திடுவாய்—நாமமதைச்

சாற்றும் பெருமை யுரைசரத மாகவே
யேற்றபடி மாலை யினிதளிப்பாய்—ஆற்றலின்றி

வாடு மெமது மனங்களிக்கக் கட்கடையால்
நாடி யொருவார்த்தை நவிலாயோ—பீடுநிறை

வள்ளலென்று கொண்டார் மகிழ வரமருளும்
ஒள்ளிலைவேற் செவ்வே ளெனவுணர்ந்தேம்—வள்ளியோய்

காணுந் திறனுடைய காதலேம் யாங்கண்மணங்
காணும் படிக்குக் கடைக்கணிப்பாய்—பூணிலங்கு சகூ0.

மாரனையும் வென்ற வடிவுடைய மாராசச்
சீராம நாதேந்த்ரச் செம்மாலென்—றாரழகின்

மங்கையர்கள் கூறி மயங்கிநின்றார் மன்மதனுந்
தங்கை யனுத்துச் சலித்துநின்றான்—துங்கமுறு

மங்கலத் தேரு மறுமறுகிற் சேர்வுகண்ட
சங்கையற்றி யாப்பேதை தானொருத்தி—பொங்கமுறு

தந்தைதாய் மோகந் தலைக்கேறிச் சூலடைந்து
வந்து பிறந்தவிள மாணிக்கம்—நந்துமுதல்

ஓதும் பிறப்பி னுதிக்காம லோங்குகஞ்சப்
போதுறுவோ னைந்து பொறித்தமுத்து—மேதினியிற் ௪௯௫.

கட்டித் தொடுப்போர் கரத்திலுற்று வாடாமல்
வட்டில் வளர்ந்த மருமாலை—கிட்டுமன்னை

நீடா தரும்பி நிறையளிக ளாற்சாம்பி
வாடா தரும்பு மலர்மாலை—பாடுபெற

நோற்றார் மனவுறுதி நுண்டுகளர்ய்ச் செய்யமதன்
போற்ற வுதித்த புதுவயிரம்—தேற்றமிகு

சாற்றும் புலவர் தருந்தமிழின் மிக்கசுவை
யேற்றுக் கனிந்த விளநருந்தேன்—பாற்கடலின்

வந்த வமுதும் மதியமுதுந் தோல்வியுறச்
சந்தமொடு வந்த தனியமுதம்—கந்தமலர் ௫00.

எய்யு மதன்கை யிருந்து வணங்காமற்
செய்ய மொழிபயிலுந் தீங்கரும்பு—கைதவர்பாற்

செல்லும் புலவர் சினமொழிபோற் காளையரைக்
கொல்லுங் கொடும்புருவக் கூர்ங்கண்ணாள்—வெள்ளம்பார்த்

தேமப் பயிருழவர் இட்டவிதை யங்குரமாய்ப்
பூமி பிளந்துவரும் பொற்பெனவே—காமமொகுள்

உள்ளே யரும்பிவளர்ந் தொப்புயர்வி லாதினிமேற்
றுள்ளிக் குதிக்குந் துணைமுலையாள்—தெள்ளியரால்

ஆய்ந்த குழலொலியு மாரமுதுங் கைப்பநலம்
வாய்ந்து குழறு மழலையாள்—பாய்ந்தமத ௫0௫.

ஆடவர்க ளாசை யளவா யணியுமலர்
சூட வளருஞ் சுரிகுழலாள்—பீடுபெறும்

அங்க விலக்கணங்க ளானவைந்த முல்லைமுகிழ்
துங்கமொடு தோன்றுஞ் சுடரெயிற்றாள்—அங்கத்

தொருகுறையு மின்றே லுலகில்வசைச் சொல்லைத்
தருமென் றிடுகுமிடைத் தையல்—வரும்பருவ

நின்றுபகை யாகு நெறிநினையா தம்புலியை
யின்றுவா வென்னு மியலினாள்—சென்றுடி

தன்னி லுறுநிழலைத் தான்பிடிக்கக் கையோச்சி
அன்னையென் றேங்கி யரற்றுவாள்—மண்ணிற்

சிறுசோற்றை யுண்ணெனவே செம்பதுமைக் கூட்டிச்
சிறுகோபங் காட்டுஞ் சிறுமி—மறுகிலுறு

தெற்றியினிற் சித்திரத்தாற் செய்தகிளி யையாயே
பற்றித்தா வென்னும் பதுமையாள்—நற்றவத்தால்

ஈன்றாரை யாட்டு மினியதிரு மஞ்சனமாய்
ஆன்றவா யின்னீ ரருவிநெஞ்சாள்—சான்றாண்மை

நீத முடையார் நினைவன்ன வெட்டுணையும்
பேதமில்லாச் சிந்தைப் பெரியள்காண்—ஓதும்

பருவமண மீன்றார் பரிந்துசெயும் முன்னே
தெருவின்மணங் கண்டசிறு செல்வி—மருவுநிழல்

பார்த்துப் பரிகசித்தாய் பாரெனவே சிற்றடியால்
ஆர்த்து மிதித்தே யகமகிழ்வாள்—காத்திருக்கும்

அன்னையரு மாயத்தா ருஞ்சூழ நேரில்வரு
வன்னமணித் தேரின் மலியுமெழிற்—பொன்னொளிசேர்

மாத ரிருவர் தடந்தோண் மருவமகிழ்
நாதனை மால்ராம நாதேந்த்ர—நீதமுறு

வள்ள லழகை மலர்விழியாற் றான்பார்த்து
வள்ளக் குமுத மலர்வாயாள்—உள்ளமுறு

காமக் குறிசிறிது காட்டுவாள் போலன்னாய்
சேமத்தே ரூர்பவன்றாள் சேர்ந்திலங்கும்—தாமமேல்

மாலானே னந்த மலர்மாலை யின்றெனக்கு
மாலானோன் றண்கரத்தால் வாங்குமென—மாதான

பெண்மகவைப் பார்த்துப் பெருந்தகையோன் செல்லுமுலா
எண்ணிவந்த பேரி லிளம்பேதாய்—எண்ணமிதை

இத்தருண நாட லிழிவன்றோ புத்தியுணர்
அத்தருணம் வாங்கி யளித்தற்குஞ்—சித்தங்

கலங்கே லெனவாளா காமனுமே சென்றான்
இலங்குமொளி ராமநா தேந்த்ரன்—நலங்கனிய

நற்பவனி போந்த நலமுணரு மற்றொருத்தி
பொற்பா ரெழிற்பெதும்பைப் பொன்னனையாள்—உற்றதொரு ௫௨௫.

மொட்டறு நாண்மலர்போன் மொய்த்தவியல் பாம்பருவங்
கிட்டியெழிற் கேழ்கிளருங் கேண்மையாள்—துட்டமதன்

ஆளுகைக்கு ளாகா ளெனினுமுய ரின்பமதை
யாளு மிளவரசி யாயினாள்—நாளடைந்த

மாதர் மனத்தின் குறிப்பைமதி யாலுணர்ந்தும்
ஓத வறியா துறுமுணர்வாள்—ஆதரவாய்ப்

பொற்பணிக டன்னைப் புனைய விரும்பிடுவாள்
கற்பணிகண் மார்பிலுறக் காதலிப்பாள்—அற்பினொடு

சாந்தம் புழுகணியத் தன்மனத்தி லுன்னுவாள்
ஆய்ந்த மலரணியு மாசையினாள்—ஏய்ந்தன்னை ௫௱0.

காட்டு நடைமறந்து கஞ்சமுறு மோதிமங்கள்
காட்டு நடைசிறிது கற்றவளாய்க்—காட்டுமந்த

அன்ன நடையுமுன்னோ வையர்நடையுந் தளர்ந்து
பின்ன நடையாக்கும் பெருநடையாள்—தெண்ணீரின்

உள்ளெழுந்த நாளஞ் சிறிதுசிறி தாயுயர்ந்து
உள்ளவம யம்பார்க்கு மொண்கமலக்—கள்ளவிழா

தாருஞ் சிறுமுகுள்போ லங்ககன்ற முற்பருவத்
தாருமுலை மேல்வந்த வாறதுபோற்—சீருடனே

காமுறுவோர் கண்ணிடறிக் காரளகக் காட்டில்விழ
நேமமுற வைத்த நெறித்தடைபோற்—காமத்தை ௫௱௫.

விட்டாரு மையற் கணிமேவல் காணவென
முட்டியெட்டிப் பார்த்து முகங்காட்டி—வட்டமிட்டுச்

சற்று மதிக்குந் தருணமுற்றுத் தாவாமல்
முற்றவு முற்று முகிண்முலையாள்—கொற்றமுறு

மட்டுக் கணைவேட் கரனுறும் வார்குழலில்
இட்டுச் செருகுமல ரெண்ணமுற்றாள்—சிட்டருரை

ஆன்ற கொலையியற்கை யாயிருத்த னன்றறிந்தும்
ஏன்றுவரு மாண்டகைமே லேவுதற்குச்—சான்ற

துணிவுந் துணிவின்மைத் தோற்றமுமா யுள்ள
அணியிலங்கு மாதர்விழி யம்பாள்—அணியாக

மன்னுமலர் வீழ்சுரும்பா மைந்தர்பார் வைக்குறிப்பை
உன்னியுணர்ந் தாரு முளமதனிற்—றுன்னி

அரும்பியரும் பாக்காம மாங்குறவே போகம்
விரும்பிவிரும் பாத விருப்பாள்—வரும்பருவம்

என்னைமுன்னும் பின்னுமின்றி யீங்கிடையி லுற்றதென்று
தன்னை யறியுந் தருவாயாள்—வன்னமுறு

செய்யவித ழிற்சிவப்புந் தேனு நிரம்பவொளிர்
மெய்யுஞ் சிறக்க விளங்குருவாள்—துய்யவல்குற்

செந்தா மரைபூத்துச் செந்தேன் றனைப்பிலிற்ற
வந்தநா ளென்ன மகிழ்ந்துநின்றாள்—சந்தமுறு

வாய்மொழியைக் காட்ட மனமிருந்துங் காட்டாமல்
ஆய்மொழியைத் தாங்கி யமர்ந்தெழிலாள்—நேயமொடு

நீட்டு மிளங்காளைச் சித்திரத்தின் முன்னின்று
நாட்டஞ் செலுத்தி நடத்தலொடு—நீட்டுமொயிற்

செங்கரத்தை வீசிடுதல் செம்பஞ்சுச் சீறடியாற்
பங்க முறவுதைத்தல் பான்மொழியிற்—சங்கையின்றிக்

கொஞ்சிச் சிரித்தல் குலாவல் தனமழுத்தல்
பஞ்சணையிற் சேர்வோ மெனப்பகர்தல்—வஞ்சமொடு

கோவித்த லாதியாங் கொள்கை விளையாட்டால்
ஆவியன்னார் காட்ட வவையுணர்வாள்—ஆவலுடன்

ஆடை யணிதந் தவிரு மணியணிந்து
தோடணிந்து வாசத் தொடையணிந்து—பீடணிந்த

கூந்தலைக் கோதிக் குலவு சடைபின்னி
யேய்ந்த தரள வடமணிந்து—ஏர்தெழிலாள்

நின்றிடுவாண் மார னிலையன்ன பூங்காவிற்
சென்று பளிக்கறையிற் சேயிழையார்—துன்றிடவே

பன்னிறத்த பேரொளியிற் பன்மணிக ளாற்செய்த
பொன்னிறத்த வம்மனைசெங் கைபுகுத்தி—மின்னிறங்கி

ஆடுகின்ற வாறதுபோ லாடிப் பதம்பாடி
வாடுகின்ற நுண்மருங்குல் வாறுட—நாடும் ருடு.

விழியாட வாடிமிக வேர்வரும்ப மின்னார்
ஒழிமதியாய் போதுமென வோதப்—பழியகன்ற

கன்னிப் பருவத்தாள் கண்ணெதிரிற் காட்சிதந்த
மன்னு மிராமநா தேந்திரமால்—முன்னின்று

தாயருந் தோழியருந் தான்கனிந்து கைதொழவே
நேய மொடுதொழுதா ணேரிழையாள்—தூய

கலையழுத்த முள்ளான் கவுத்துவமார்ந் தேய்ந்த
மலையழுத்த வொண்ணுத மார்பின்—முலையழுத்த

எண்ணினுண் முற்ற விலையேயென் றங்கழுங்கிப்
புண்ணினுள் போலப் புகலுவாள்—நண்ணியுறுந் ருசo.

தாயரே பச்சைத் தடங்கிரியின் பக்கத்தின்
ஆயுமென் னுள்ள மமர்தலினால்—நேயமுற

அன்பா லிருத்தி யகமகிழ்விப் பீரென்ன
அன்பான தாய ரறைகுவார்—என்பகர்ந்தாய்

தக்கார்க்குத் தக்கவையே யீவர் தகுதியெனும்
அக்கருத்துக் கொப்ப வவனிதனில்—ஒக்கநினை

இந்த்ரகுலத் தோன்ற லிராமநா தேந்தல்பால்
எந்த விதமா யிசைவிப்போம்—எந்தம்

மயிலே யெனவுரைக்க மார்பிலொரு மாது
பயில்வாளச் சூழ்ச்சிதனைப் பாரீர்—அயலிருப்பார் ருசரு.

கண்டதில்லை யென்று கழறிக்கை யாவிசைக்க
அண்டிநின்றார் தாங்கி யவனகன்றார்—கண்டமதன்

எல்லா மறிந்து மறியார்போ லேகினன்
மல்லல் வதனமுற்ற மாதொருத்தி—சல்லாப

மங்கைப் பருவமுற்றாள் மாதர்க் கணிகலமாய்த்
துங்க முறவடிவந் தோன்றிநின்றாள்—மங்குலினை

விட்டிலங்கு மின்னலொளி மேனி தனிற்பணிகள்
இட்டிலங்கத் தோழியரோ டின்புடனே—கட்டிலங்கும்

ஏழுநிலைச் செய்குன்றத் தேறி யெழாலதனின்
ஏழு நிலைக்க விசைபாடிக்—காம்படிந்த ௫௭௦.

அம்மானை யாடு மளவிலே கீர்த்திவளர்
செம்மலா மால்ராம நாதேந்த்ரன்—றம்முடைய

அம்பொற் கொடிஞ்சி யலங்காரஞ் செய்தொளிரும்
செம்பொற் கொடித்தேர் செறிந்திடலும்—கொம்பனையார்

பாதம் பணிந்தார்பொற் பாவையுந் தான்பணிந்தாள்
காதம் பணிந்தாள் கருத்தழிந்தாள்—சீதமலர்

ஐங்கணையான் வில்லை வளைத்ததனி னாணேற்றித்
துங்கப் பகழி சொரியநின்றாள்—சங்கை

யறிந்துநின்றாள் பேச்சி லமுதமுண்டாள் காமஞ்
செறிந்துநின்றா ளாகிச் சிறந்தாள்—புறந்திகழுங் ௫௭௫.

காப்பை நினைந்தாள்கைக் காப்பதனைத் தானிகந்தாள்
சேப்பும் விடமுங்கட் சேரநின்றாள்—பூப்படிந்த

ஓதி சரியநின்று ளோங்குதனிக் கச்சவிழ்ந்தாள்
மோதுதனம் பூரிக்க முன்னின்றாள்—காதலினைத்

தேடி மனத்திற் றினைக்கும் பருவமுற்றாள்
கூடி மருவுங் குணமுற்றாள்—பீடிசையார்

செய்ய பவளவிதழ்த் தேனுஞ் செறியநின்றாள்
மையிலங்கு கண்கள் மருளநின்றாள்—ஐயமின்றிக்

கற்ற மதனன் கலையை நினைந்துருகிச்
சற்றுமொழி யாவிரக தாபமுற்றாள்—பற்றியுறும் ௫௮௦.

வாரைக் கிழித்து வளருந் தனத்திலங்கும்
ஆரநீ ருக வலமந்தாள்—நாரமிகு

சாந்தக் கலவை தனைவெறுத்தாள் மேகலையும்
காந்தி யுடையுங் கழலநின்றாள்—காந்திமிகு

தன்னிறமு மாறினு டாங்குந் தனப்பொறைக்கு
மின்னிடையுந் தேய்ந்து மெலிந்துநின்றாள்—பின்னமிலா

வாம வரவம் படந்தூக்க வண்ணமயில்
தாமவொயில் காட்டித் தடுத்திட்டாள்—காமர்

அரம்பையென வுன்னு வதற்கேற்பத் தன்னின்
அரம்பை தனைத் தாங்கி யலுத்தாள்—வரம்பு

கடந்தாளென் றன்னுங் கணக்கி லிருந்தாள்
மடந்தா னெனவறிய மாட்டாள்—இடந்தோறும்

ஏகுவாள் சற்றே யிருப்பா ளெழுந்திருப்பாள்
ஆகம் பசந்தே யழுங்குவாள்—மாகமனைப்

பாலிற் புகுவாள்பின் பாங்கியரைச் சீறுவாள்
யாலே மிகுந்து மயங்குவாள்—கோலிநின்ற

அன்னை யனைச்சினப்பா ளாகா மதனுநீ
யென்னைசெய்தா யென்றே யிரங்குவாள்—சன்னல்

வழிவருங் காற்றை மறவியென்பாள் பார்த்தோர்
பழியாரோ வென்று பதைப்பாள்—கழிய

உலைந்த மனத்தாட் குறுநிகழ்ச்சி யாய்ந்தும்
மலைந்தமதன் கையோயா வண்ணங்—கலந்தவம்பை

மங்கைமார் பெய்தான் மடந்தை பொறுக்காளாய்த்
தங்குமனை விட்டிறைபாற் றன்வந்தாள்—அங்குமதன்

நோய்நீங்காள் முன்போல நுண்ணறிவு தோன்றலுமே
தாயரைப் பாங்கியரைத் தான்பாரா—மேயமதி

தன்னிடத்தே நாணந் ததும்பத் தலைகவிழ்ந்து
மின்னற் கொடியொன்று மேதினியில்—மன்னியன்ன

பெண்ணரசை யன்னைமார் பார்த்துப் பெருமையுயர்
வண்ணமயி லேநின் மதிக்கழகோ—நண்ணும்

குலநலத்தை யோர்ந்திலையே கொண்டகோ லத்தை
இலநலத்தார் காணினெறி யாமோ—இலநலத்தை

நெஞ்சி னினைத்து நிறைகாப்பா யென்றேயவ்
வஞ்சிலோ திக்குரைக்க வாயிழையாள்—அஞ்செறியச்

செய்யமலர் வாய்திறந்து செப்புவா ளாயேநான்
உய்யவிந்தத் தேரி லொளிதிகழுந்—துய்ய

கருநீல மாமலைபோற் கண்ணுமுள்ளுங் காட்சி
தருராம நாதேந்த்ரத் தக்கோன்—அருகிருந்து

வாழு மணமாலை வாங்கி யினிதளிப்பிற்
றாழாத வென்னுயிருந் தாழுமால்—வாழிமற்ற ௩00.

என்போலு மாத ரிருவர்க் கிடங்கொடுத்தான்
பொன்போலும் மெற்குப் புகலிலையோ—என்னுங்கால்

மற்றுநின்ற தோழியர்கண் மானேயீ தென்னமதி
கற்ற கலைமறந்த காரணமென்—உற்றுணர்ந்தால்

நீயே யறிவாய் நெறிதவறிப் போய்மணத்தல்
தாயே நமக்குத் தகுதியன்றே—நேயமொடு

மாற்று னிலாமனன்கு வாழ்வதுவே வாழ்வாகு
மாற்று ளெனுமொழியு மாகாதே—மாற்றமிவை

தள்ளினு யானுனஞ் சாமிதனை நீமணக்கக்
கொள்ளைத் தவஞ்செய்யக் கூடுமோ—மெள்ளமெள்ள ௩0௫.

நோற்று னலம்பெறலா நோற்றுநலம் பெற்றவரி
யேற்றை மனத்து னிருத்தெனுங்கால்—ஏற்றவன்றோர்

அப்பா லடைந்ததா லாங்குணர்ந்த மற்றொருத்தி
மைப்படியுங் கண்ணாள் மடந்தையாள்—செப்பமுறு

தேன்பொழியு மேகத் திரளுண்டே லாங்கதனேர்
கான்பொழியுந் தாமக் கருங்குழலாள்—வான்பொலிந்து

பற்றுங் களங்கமிலாப் பாதிமதி யொன்றுண்டேற்
சற்றே பொருவுந் தனிநுதலாள்—கொற்றமதன்

கைபிரும்பு வில்லைக் கவர்ந்துவைத்த வாறதுபோற்
செய்ய கரும்புருவச் சீருடையாள்—மைவிடமுந் ௩௧0.

தோய்ந்து புகழ்வெற்றிச் சொற்கொலைக ளாமுறையில்
ஏய்ந்து வெளுத்துச் சிவந்திருளும்—பாய்ந்துலவித்

துன்னு கருங்குவளைத் தூய்மலர்தா முண்டெனிலவ்
வன்னமல ரொக்கு மலர்விழியாள்—இந்நிலத்திற்

கந்த மறியுங் குமிழின்மலர் கண்டதுண்டேல்
நந்தலிலா தம்மலர்நேர் நாசியினாள்—சந்தமுறப்

பூணிற் புடைபெயராப் பொற்பினசை யூசறனைக்
காணி னிகர்க்குமிரு காதுடையாள்—பாணிலங்காக்

கூம்பி யுலராக் குமுதமுண்டே லாங்கதனேர்த்
தேன்பிலிற்றுந் துய்யமொழிச் செவ்வாயாள்—ஆம்பலுக்குட் ௬௧௫

பூத்துமல ராதமுல்லைப் புத்தரும்பின் மாலைதனைப்
பார்த்ததுண்டே லன்னமினிர் பல்வரியாள்—காத்திரமாய்த்

தேனூறல் காட்டுஞ் செழும்பவள முண்டாகிற்
றுனிகர்க்குஞ் செவ்வித் தனியிதழாள்—மாநிலத்திற்

பிற்பூச் சிலாதொளிசெய் பெற்றியுறு மாடியுண்டேற்
பொற்பினைப்புச் சாற்றுங் கவுட்பொலிவாள்—அற்புதமாய்

ஊதா தொலிக்குமொரு சங்குண்டே லன்னதைநேர்
சீதார் செழுங்கமுகச் செங்களத்தாள்—தீதில்புரை

யுற்றடையா வேர லுலகிலுண்டே லொக்குமெனச்
சொற்ற தகுதிச் சுடர்த்தோளாள்—பற்றியுறுந் ௬௨0.

தந்தி பொருந்தாத் தனிமகர யாழுண்டேற்
சந்தமுற வொப்பாந் தளிர்க்கரத்தாள்—நந்தா

வரிபிலங்குங் காந்தண் மலருண்டே லொப்புச்
சரியாகு மங்கைத் தலத்தாள்—அரியநறுஞ்

செங்களபச் சேற்றின் முழுகிச் செறிந்திறுகிப்
பொங்கமுறு தேமற் பொலிவுகொண்டு—துங்கமுடன்

பூரித்து விம்மிப் புளகித் திறுமாந்து
வாரிட்டு வெண்டரள மாலையிட்டுச்—சீரிட்டு

நின்ற வினைக்குன்ற நீணிலத்தி லுண்டாயின்
வென்றமதக் குன்றன்ன வெம்முலையாள்—துன்றும் ௬௨௫.

மலையடியின் வாலும் வளராலின் மீதில்
இலகுமுடலாருமெழி லுங்கொள்—தலையதனை

மன்னரம்பைத் தூரினிலே வைத்துப் படம்விரித்து
வன்னமுறத் துஞ்சுகரு மாநாகம்—இந்நிலத்தின்

மீதிருக்கு மாகில் விரும்பி யதைநிகர்க்கும்
ஓது முரோம வொழுக்குடையாள்—சீதநதி

தன்னி லழியாத் தனிச்சுழியு மொண்வகுளந்
துன்னிக் கருகாத தூய்மலரும்—மன்னுமிந்தப்

பொற்பாரி லுண்டேற் பொருவு மெனவறிஞர்
சொற்பரவு முந்திச் சுழியினாள்—பிற்பொழுதின்

முற்றாத வாலந் தளிருண்டே லன்னதற்குச்
சற்றுநிக ராகுந் தனிவயிற்றாள்—தெற்றெனவே

கொண்டலையுந் திங்களையுங் கூறு மலைகளையும்
கொண்டலையும் வஞ்சிக் கொடியுலகிற்—கண்டதுண்டேல்

ஒப்பாகு மென்ன வொசிந்து பொறைக்காற்றா
தெப்போதுந் தேயு மிடையினாள்—இப்புவியில்

என்றுஞ் சுருங்கா தெடுத்தபடி யேபணத்திற்
றுன்றுங் கலைக்குளம்பின் றேற்றமுறக்—கன்றாத

பாம்பின் படமதனைப் பார்த்ததுண்டே லப்படத்தைத்
தாம்பகருஞ் சீதக் கடிதடத்தாள்—ஏம்பலின்றித்

தண்மை யொடுவெம்மை சாய வினைபொருந்தி
ஒண்மையுறும் பொற்கதலி யுண்டாகில்—வண்மையினால்

ஒப்பெனவே கற்றோ ருவமப் பொருளாகச்
செப்பலுறுஞ் சோதிச் செழுங்குறங்காள்—இப்படியிற்

காற்செறி விலாத கடகமுண்டேற் சற்றுவமை
யாற்செறிய லாகுமுழந் தாளழகாள்—மேற்செறியுந்

தூர்க்கந்த மில்லாத துய்யவரா லுண்டேனி
கர்க்குஞ் செழிய கணைக்காலாள்—தர்க்கமிலாச்

சித்தசனா ராடதனைத் தீட்டி மறைத்துவைத்த
புத்தகமோ வென்னும் புறவடியாள்—இத்தலத்தின்

வாடா வணிச்ச மலருண்டே லொக்குமெனுஞ்
சேடா ரலத்தகஞ்சேர் சீறடியாள்—பீடார்

அணிகட் கணியாகு மாயிழையா ளன்பிற்
பணியப் பணியாத பாவை—துணிவாய்த்

துறந்தோருங் காணிற் றுறவைத் துறக்கப்
பிறந்தா ளெனுநற் பிறப்பாள்—மறைந்திலங்கும்

காமன் றனக்குரிய காணியாய்க் காக்கவரூந்
தேமமுறு மின்ப விறைவியாம்—பூமன்

கரம்பார்த்து மெச்சுங் கனவடிவாள் மாலைத்
தரம்பார்த் திருக்குந் தருணம்—அரம்பையர்போற்

பாங்கியர்கள் போற்றிப் பழிச்சி விளையாட்டால்
ஓங்கு மனைபி லுடன்கொண்டு—பாங்குமுன்றில்

சேர்ந்தினிய பந்தாடல் செய்கவென்னப் பெண்ணரசி
கூர்ந்த களிப்பாற் குடங்கைபினில்—ஆர்ந்துதிகழ்

பந்தேந்தி யாடிப் பலமலரும் பூத்தலர்ந்த
சந்தமுறும் பொற்கொம்பு தன்னையொத்துக்—கந்தமலர்க்

காரளிக ளார்ப்பக் கரத்தின் வளைகலிப்ப
ஆரு மணிமே கலையதிர—வாரணிந்த

கொங்கைத் துகினுடங்கக் கோலமதி யின்முத்து
துங்க முறவுதிருந் தோற்றம்போல்—அங்கு

குளிர்வதனந் தன்னிற் குறுவேர்கள் சிந்த
நளிருங் கருங்குவளை நாட்டம்—மிளிர்பந்தின்

பின்னே பிறழப் பிணித்த மலரவிழ
மின்னேயு மார மிளிர்ந்தசையப்—பொன்னேயுஞ்

சில மடந்தை சிறந்துவிளை யாடுங்கால்
ஞாலம் புரக்கும் நரேந்திரமால்—கோலமுறு

தேரொலியைக் கேட்டுத் தெருவிற் புறம்போந்து
தாரிலங்கு மாதிருவர் தம்முடனே—சீரிலங்கும்

மன்ன னழகை மலர்விழியாற் கூட்டுண்டு
பின்னமுற்று ளாகிப் பிதற்றுவாள்—என்னரசே

காலங் கருதிக் கழித்த தவப்பேறு
சீலமுட னும்மையின்று சேர்த்ததால்—மால்பெருகிக்

கட்டழியா முன்னே கனியுமுன்ற னன்புவலைப்
பட்டின்ப வாரிதியி லேபடிந்து—தொட்டணைந்து

காமக் கடலின் கரையேறி யெந்நாளுஞ்
சேமமுடன் வாழ்ந்து செறிந்திருக்க—ஏமமுறு

மாலை யளித்திடுவீர் மாரன் வருத்தவரும்
மாலை யழித்திடுவீர் வள்ளலே—மூலமெனக்

கூறுங் கரியின் முனந்தோன்றி யாட்கொண்டவர்
மேலுமெனைக் காத்தல் மிகையாமோ—ஆவலுடன் ௬௬௦.

நீதேவ னாடியா ளென்றநெறி கொண்டவென்மேல்
வாதேன் வழக்கேன் வழுத்துவீர்—சாதனையாய்

வாயுந் திறவாமல் வார்த்தையொன்றும் பேசாமல்
நேயக் குறிப்பு நிகழ்த்தாமற்—பாயகொடை

ஆருங் கரத்தா லணைத்திறுகப் புல்லாமற்
றூறு மளித்தெனைநீர் தாங்காமற்—சோரும்

திறமைகண்டும் நெஞ்சிற் சிறிதுமிரங் கீரேல்
அறமோ நுமக்கி தழகோ—மறமகன்ற

நீதியரே யும்மிடத்து நீண்டநா ளென்காதல்
வாதனையை மாற்றி மகிழீரோ—மாதரெலாம் ௬௬௫.

எள்ளுவா ரென்னை யிரங்கிநீர் காவீரேல்
கள்ளொழுகுந் தண்டுளபக் கண்ணியரே—தெள்ளமுதம்

தேவர்க் களித்த திருமாலே காமுறுமென்
ஆவிக் கினித்த வருந்துணையே—ஓவியத்தை

வென்ற விராமநா தேந்திரவெம் மேலோயே
யென்றே தனைமறந் தேக்கமுற்றுத்—துன்றிமனத்

துள்ளெழுந்த காம வழலினொளி யொன்றுகண்டோர்
விள்ளவுடற் றோற்றம் விளங்கநின்றாள்—தெள்ளியசீர்

மன்னிறைவ னூர்ந்த வளர்தே ரயன்மருகு
தன்னிலுற்ற தாலரிவை தானொருத்தி—பன்னுமயன் ௬௭௦.

சித்திரத்திற் றீட்டிச் சிறந்தவுரு வந்தேர்ந்து
பத்திரமா நோற்கும் படிவத்தாள்—எத்திசையும்

பாய விருளைப் பழித்த கருங்குழலாள்
சேயமல ரைப்பழித்த செம்முகத்தாள்—மேய

சிலையைப் பழித்த செறிநுதலாள் பொல்லாக்
கொலையைப் பழித்தவிழிக் கோலாள்—தலையான

முத்தைப் பழித்தவிள மூரலாள் மால்கரத்தின்
நத்தைப் பழித்த நறுங்களத்தாள்—புத்தமுத

கும்பந் தனைப்பழித்த கொங்கையாள் பொற்பிரதி
விம்பந் தனைப்பழித்த மேனியாள்—அம்புவியின்

மாலைப் பழித்த மருங்குலாள் தேரினுருட்
காலைப் பழித்தவல்குற் காந்தியாள்—மால்மிகுந்த

தந்திக்கை யைப்பழித்த தண்குறங்காள் பூமகளிர்
வந்திக்கை யைப்பழித்த மாண்புடையாள்—சந்தியுறு

செய்யமல ரைப்பழித்த சிறடியா ளன்னங்கள்
நையத் தளர்நடை நன்னடையாள்—செய்யமதன்

ஆட்சிக் குரிய வறுபத்து நாற்கலையும்
மாட்சியுடன் கற்று மனங்கனிவாள்—தோட்செறிவாற்

பொற்றனத்தைப் புல்லும் புதிய மணப்பருவம்
இற்றைநாட் கைகூடா தென்னவென்பாள்—உற்றகன்ற

பேதை யரும்பிப் பெதும்பை தனிற்குவிந்து
மாதர்நிறை மங்கை மலர்மலர்ந்து—ஓதவரும்

பொற்பார் மடந்தைதனிற் பூரணமாய்ப் பூத்தவின்ப
இப்பருவம் வந்துமின்ப மெய்திலதேல்—எப்பொழுது

கிட்டுமோ வென்பாள் கிளரு மதன்கணைகள்
பட்டுப் புழுங்கிப் பரிதவிப்பாள்—மட்டிழியுங்

கொந்தலர்ந்து வண்டார் குழல்செறியுந் தோழியர்கள்
சந்தமொடு சூழ்ந்தருகிற் றங்கிவர—நந்தலிலா

தாருநிலா முற்றத் தரியணையின் மீதேறிச்
சீருலா மிந்திரையைப் போற்செறிந்து—பேர்சிறந்த

மாதோர் விறலியவள் வாழ்த்தெடுத்துக் கொண்டாட
ஆதரவாய் வேண்டு மரும்பணியும்—தாதவிழ்ந்த

பூமலருஞ் சாந்தும் புனையுந் துகில்பலவும்
ஏழுறவே கையா லினிதளித்து—மாமை

விறலியே சிந்தை மெலிவடைய மாரன்
மறலிபோல் வாட்டி வருத்தும்—திறனறிந்தும்

ஏதிலார் போல விருக்கின்றா யீதுனக்கு
நீதியோ யானோ நிகழ்த்துவேன்—மாதர்

பருவங் கடந்தாற் பயன்பெறுவ தெங்ஙன்
மருவு மணங்கூட்டி வைப்பாய்—பெருமைதர

எற்கிசைந்த காத லிறைவனெவன் சாற்றுகெனச்
சொற்கனிந்த மாது துலக்குவாள்—கற்கனிந்த

மற்புயத்தான் விண்ணின் வலாரி குலத்தோன்றல்
கற்புயர்ந்த தேர்ச்சிக் கவினுடையான்—இற்செறிந்து

வாழுமுயர் பூங்குடியான் மாற்றலர்கள் கைகூப்பித்
தாழும் படிக்கரசு தான்புரிவான்—ஆழியைப்போல்

ஓங்கும் பெருஞ்செல்வ னுத்தமர்கள் சிந்தைதனிற்
பாங்காய்ப் பயின்றுவளர் பண்புடையான்—தேங்கமழும்

பைந்தொடையன் மார்பணிந்தப் பாரி லுயர்கொடையான்
செந்தமிழைத் தாங்குஞ் செழுங்குணத்தான்—நந்தாழி

தன்னை மறைத்தவனி தன்னிற் கருமேக
வன்னஞ் செறிந்ததிரு மாலான—மன்னவனெம்

ஸ்ரீராம நாதேந் திரவிறையே நிற்சூரியன்
பாரதனி லென்று பகர்ந்தமொழி—யாரமுதைக்

காதின் வழியாய்க் கனிந்துண்டு சோர்வகன்று
மாதுமனங் கூர்ந்து மகிழுங்கால்—நீதமிகு

பூபதியின் றேரிற் பொருந்துமொலி கேட்டெழுந்து
சாபமெலி நன்னுதலார் தம்முடனே—கோபவிதழ்

மாதரிவை போந்து மறுகினிரு பெண்மருவுஞ்
சீதரனைக் கண்டு திகைத்துநின்றாள்—ஆதரவாய்

இன்மொழிகள் கூறினா ளெந்தலே காவென்றாள்
வன்மமின்றி யென்னை மணத்தியென்றாள்—தன்மமதிற்

கைதேர்ந்த பேரரசே காதலித்த யான்மருவிக்
கைதேரக் கூடிக் கலக்கவென்றாள்—பொய்தீர

என்றுமுனைப் புந்தி யிசைத்தேனா னவ்வணமே
மன்ற லளித்து மகிழ்தியென்றாள்—வென்றிபுனை

மன்னா தரமுணர்ந்து வந்தே னருளாயேற்
பின்னே யெனைத்தாங்கும் பேருண்டோ—பன்னுநலம்

தன்னைப் பருகுந் தருண மிதுவலவோ
என்னை யிரங்காத தென்னையென்றாள்—சொன்னவெல்லாம் ௭0௫.

கேட்டுங்கே ளாதவன்போற் கிட்டியணை யாதிருத்தல்
நாட்டுமுறை தானோ நவிலென்றாள்—கூட்டுவிதி

இன்றேற் கனிவா யிணைக்க வருவேனோ
அன்றே யமைத்ததிது வாமென்பாள்—முன்றேர்ந்து

பாங்கியர்கள் சொன்ன படியே யிவணடைதல்
ஈங்கெனது பாக்கியமே யென்றிசைத்தாள்—தாங்காத

மையலா ளாகி மதனன் சொரிமலரால்
நையவளாய் மேனி நலிவடைந்து—கைமலரை

உச்சிமேற் சேர்த்துயிரி னோவியம்போ னிற்பவளை
நச்சிப்பார்த் தொன்று நவிலாமல்—அச்சமயம் ௭௧0.

சிராம நாதேந்த்ரன் செய்ய தடந்தேரும்
ஏரா ரயன்மறுகி லேகினதால்—நேரான

மாதரிவை யைக்கூட்டி மங்கையரு மேவவம்புப்
போதொழிந்து வேளும் புறப்பட்டான்—ஓதவொண்ணாத்

தேரகல வங்குணர்ந்த தேகவொளி யாளொருத்தி
சீர்சிறந்த காலத் தெரிவையாள்—ஏர்சிறக்க

ஆக்கினான் மாதிவளை யாக்கினா னோவெனவே
நோக்கினா னேக்கவொளி நுண்ணழகாள்—தேக்கமழும்

கார்மணலை வென்ற வளகத்தாள் வெண்மதியின்
ஏரதனை வென்ற வெழின்முகத்தாள்—தாருலவு ௭௧௫.

வேலதனை வென்றவெய்ய கண்ணினா ளட்டநறும்
பாலதனை வென்றமொழிப் பண்ணினாள்—கோலமுறு

கத்திரிகை வென்றவிரு காதினாள் சண்பகத்தின்
புத்தலரை வென்றதுண்டப் போதினாள்—பத்தியுறு

மாமுருந்தை வென்றமணி மூரலாள் மாமுருக்கின்
சேமலரை வென்றவிதழ்த் தேறலாள்—பூமலரும்

கந்திதனை வென்றவொண்க ளத்தினாள் பொற்கிரியின்
வந்தமையை வென்றதோள்வ ளத்தினாள்—கந்தமுறு

கூர்ங்குரும்பை வென்றவெழிற் கொங்கையாள் கேழ்மிகுந்து
தேங்கமழுங் காந்தள்வென்ற செங்கையாள்—ஓங்குமொலி எ௨0.

சேர்துடியை வென்றவிடைத் தேய்வினாள் கானகத்தில்
ஆர்பிடியை வென்றநடை யாய்வினாள்—போர்மதனன்

தேரதனை வென்றவல்குற் சீரினாள் வண்கதலி
நீரதனை வென்றதொடை நேரினாள்—பாரதனிற்

பஞ்சதனை வென்றவடிப் பாவையாள் பாடுபெறும்
நெஞ்சதனை வென்றவெழில் நீர்மையாள்—அஞ்சி

லரிச்சிலம்பு கூவி யனமழைக்க அருகின்
வரிச்சிலம்பன் கையில் வளைக்கத்—தரிச்சலம்பு

பூங்கணைகண் மார்பிற் புகுதப் பொருக்கெனவாய்த்
தாங்குழைந்து காமந் தலைக்கேறிப்—பாங்கியர்கள் எ௨ரு.

வாழியென வாழ்த்தி மருங்கிற் கவிந்துவர
ஆழிதனில் வந்த வமுதமன்னாள்—கேழ்கிளரும்

காந்தி யுருவிற் கவினு மணியணிகள்
ஏந்தி மதன்படைவீ டாயிலங்கும்—பூந்தருக்கள்

மொய்த்த மலர்க்காவின் மோக முடன்புகுந்தே
எய்த்தவிடை நோவ வினிதெய்திப்—பைத்தகிளைக்

கோட்டு மலருங் கொடிமலரு நீர்மீது
நீட்டு மலரும் நிலமலருங்—கூட்டமுறப்

பாங்கியருந் தானும் பரிந்துகொய்து நீராடி
ஓங்கு பளிக்கறையி னுட்புகுந்து—பாங்குடனே எ௩0.

ஈனுக் கதலி யிளநாரி னுன்மலரை
மானூர் தொடுக்க மனமகிழ்ந்து—காணூரும்

மைக்குழலிற் சூட்டியெழில் மார்பி லணிந்துதிகழ்
மெய்க்கினிமை யாக விளங்கிநின்ற—மைக்கணியை

ஆரும் படிமக் கலத்தி னருகழைத்து
நேரு முருவி னிழல்காட்ட—வாரணிந்த

கொங்கையாள் கண்ணூரக் கூர்ந்த தனதெழிலை
அங்குகண்டு சிந்தை யயர்ந்தனளாய்—மங்கைமீர்

பொங்கு மழகின் பொலிவு தனைவாளா
இங்குநீர் பார்த்ததினு லேதுபயன்—துங்க ௭௩௫.

மணமகனைக் காட்டி மணமாலை சூட்டிக்
குணமான பள்ளியறை கூட்டி—வணமேவக்

காதலனும் யானுங் கலந்துவிளை யாடுங்கால்
ஆதரவாய்ப் பார்த்த லழகாம்—பூதலத்தின்

மாதர் நகைக்க வனப்பு மெனைப்பழிக்க
ஏதுக்கோ நீரிங் கிருக்கின்றீர்—போதாரும்

வேதா வெனக்கு விதித்த விதியிதுவோ
மாதாவு மெண்ணாத வாறெதுவோ—நீதமின்றி

மாரன் சிலையை வளைத்து வளைத்துமலர்க்
கூரம்பு கொட்டிக் குவிக்கின்றுன்—ஈரமிலாச் ௭௪0.

சிந்தையா னென்செய்வேன் சேயிழையீ ரென்னினிய
தந்தையார் பாலேனுஞ் சாற்றுவீர்—சந்தமணம்

கூடாதேல் மன்மதனூர் கோப மினிப்பொறுக்கேன்
ஏடுடையீ ரென்று பிதற்றிநின்ற—ஏடவிழும்

தாம மணிந்த தனத்தாட் குபசாரம்
தாமகிழ்ந்து சாற்றித் தளிர்க்கரத்தார்—கோமகளை

மாமனைக்குக் கூட்டி வருங்கா லெழிலாரும்
சேமத்தே ரேறிச் சிறந்துவந்த—பூமனும்

சீரா ரிராமநா தேந்த்ரன் றிருவழகை
நேராகக் கண்டா னிறையழிந்தாள்—போராரும் ௭௪௫.

மற்புயனே யென்றன் மனமயக்கம் பாராயோ
அற்புதமாய்க் கட்டி யணையாயோ—பொற்பாரும்

பாலாழி யிற்றுயின்ற பண்ணவனே யானுழலும்
மாலாழி யிற்கடத்தி வைக்காயோ—மாலாய்

இரந்தாரைக் காக்கு மிறைவனே மாலை
யிரந்தேற் கிசைந்தருள்வா யென்றாள்—வரந்தந்து

காவாயே லாவி கழியும் பழியுனக்கு
மேவாமற் கூடியெனை மேவென்றாள்—ஆவலுடன்

மங்கை யிருவர் மணங்கண்டா யான்மருவச்
சங்கையென்ன நீயுணர்ந்து சாற்றென்றாள்—அங்கசனே எ௫௨.

யென்று பலவா றிசைக்க விருங்களியான்
துன்றுமணித் தேருந் தொடர்ந்தயலிற்—சென்றதால்

ஏராருங் கூந்த ரெழிற்றேற்றி ஞான்பாய்ச்
சீரார் தெரிவைதனைச் சேர்த்தகன்றார்—போராடு

மாரனுங்கை யோய்ந்து மறைந்தகன்றான் பின்மறுகிற்
றேரனைமேற் கண்டதிறத் தாளொருத்தி—யேர்பரவும்

பாருலகும் விண்ணுலகும் பாதலமு மேலுமெந்தப்
பேருலகு மேத்துமெழிற் பேரிளம்பெண்—தாருலவு

வார்குழற்குக் கூந்தல் வதனந் தனக்குமதி
கார்விழிக்கு வண்டு கபோலமதற்—கோர்சாணை எ௫௫.

ஏர்செவிக்கு வள்ளை யெழினுதலுக் கொண்சாபம்
சீர்நாசிக் கெட்பூநற் செய்யவிதழ்க்—கார்தொண்டை

தேன்மொழிக்குப் புத்தமுது செவ்வாய்க்கு வண்வீழி
வானெயிற்றுக் கோங்குமணி மாதுளையும்—தானிகர்க்கும்

என்றபொரு ளொப்பா யிலங்கும் வடிவுடையாள்
குன்றமெனும் பேராங்குக் குன்றிடவே—நன்றாக

ஏந்துமிளங் கொங்கை யெனற்கேற்ப மால்கரியின்
காந்திமிகு கொம்பைப்போற் காதலர்கை—சேர்ந்துபற்றத்

தாழ்ந்து தலைநிமிர்ந்து தன்பொறைக்காற் றாமலிடை
ஆழ்ந்த துயரா லலைவதெனச்—சூழ்ந்தவுரை எ௬௦.

தன்னை யறியத் தலைசாய்ந்து பார்த்ததென
வன்னவல்குற் றேரோடா வண்ணமதின்—முன்னிலையில்

இட்டமுட்டுக் கட்டை யெனவிலங்கி மாரவேள்
விட்ட கணைக்கு விலகிநின்று—மட்டில்லா

திற்றை வரையு மிறுமாந் திருந்ததினால்
உற்றீ பயனெவனோ வொன்றிலையே—முற்றும்

வணங்குதலான் வாய்க்குநல நாங்காண்டு மென்று
வணங்குவது போல வணங்கிச்—சுணங்கரும்பிப்

பூண்ட வணியின் பொறைக்காற்றா தேசரிந்து
மாண்டவொளி தேங்கும் வனமுலையாள்—நீண்ட ௭௬௯.

கிளைத்தோளாள் கண்டக் கிளர்ச்சியாள் சூதத்
தளிர்போன்ற செங்கைத் தலத்தாள்—இளைத்துவகிர்

நூலிழையைப் போன்றொசியு நுண்ணிடையாள் சற்றுமுதிர்
ஆலிலையைப் போன்ற வடிவயிறாள்—கோலமுறு

சிற்றால வட்டமோ செந்தா மரைமலரோ
வற்றாத நீரின் வளஞ்சுனையோ—உற்றவெழிற்

பட்டமோ பாரிற் பரவு மரசிலையோ
பட்டமத னேறும் பருந்தேரோ—கிட்டவெதை

ஒப்பாக்க லாமெனவே யுன்னு மெழில்பொலிந்து
செப்பமுறு மல்குற் சிறப்புடையாள்—அற்புதஞ்சேர் ௭௭௦.

ஓதிமத்தின் றூவிதனை யொத்திலங்குஞ் சீறடியாள்
மேதினிக்குள் மேலாய மெல்லியலாள்—சோதிமிக்க

அங்கங்கட் கேற்றவணி யாங்காங் கணிந்தெழில்சேர்
பொங்கச் செறிந்ததிருப் பொற்பாவை—பங்கிலுறும்

பாங்கியரைப் பார்த்துப் பகருவா ளென்றனைநீர்
தாங்கியே காக்குந் தகுதியீர்—ஆங்கொழிந்த

ஆறதனி னாலு மகன்றதே யேழினிலும்
பேறடையா தின்பம் பெறுவதெப்போ—நீறாகத்

தீய்ந்த மதனன் செயும்பூசல் தன்னையென்பால்
ஆய்ந்து மறியார்போ லாயினீர்—வாய்ந்த ௭௭௧

துணைவ னுருவெளியாய்த் தோன்றித் தினமும்
அணைவான்போ னேரி லணைந்தான்—இணைமுலைகள்

மார்பி லழுத்த மலர்க்கை தனைநீட்டி
ஆர்வமொடு சேர்க்க வகப்படான்—ஊரினொடு

பேரு மறியேன் பெருமை தனையறியேன்
சீரு மறியேன் சிறப்பறியேன்—நேரிழையீர்

பச்சைக் கிரிபோற் படிவத்தான் மார்பதனில்
நச்சியொரு மாதவளை நண்ணவைத்தான்—விச்சைவல்லான்

போல நடித்துப் புறத்தகன்றா னன்னவன்பால்
மாலாகிச் சிந்தை மயங்கினேன்—கோலமுளான்

ஆரென் றறிந்தெனக்கே யன்பா யறைந்திடுவீர்
வாரணிந்த கொங்கை மடவீர்காள்—நேரிலெனச்

செப்பினா ளத்தருணஞ் சீராம நாதேந்த்ரன்
அற்புதஞ்சேர் தேரின் மணியரவம்—பொற்புடனே

பாங்கியர்கள் கேட்டார் பலித்த தெழுந்திரென்றார்
ஓங்குமய லாளு முவந்தெழுந்தாள்—பாங்குறவே

கண்டா ளுருவெளியிற் கண்டவனிக் காளையென்றாள்
வண்டாருஞ் செங்கை மலர்குவித்தாள்—அண்டி

உருகினாள் சிந்தை யுலைந்தாள்பே ரின்பந்
தருகுவா யென்றே தளர்ந்தாள்—திருவுருவைத்

தீட்டித் தினமுந் தெரிசித்தே னின்புவனப்
பாட்டி லிசைத்துநிதம் பாடினேன்—கேட்டவர்கள்

வந்துரைக்க வில்லையா மன்னா மணமாலை
தந்தெனக்கை சேர்த்துத் தழுவாயோ—கொந்தலர்ந்த

பூவையின்பூ வண்ணா புகழ்வண்ணா வென்றுரைத்த
பாவை நலமும் பருகாமற்—கோவையிதழ்

மங்கை யிருவர் மருவும் புயாசலத்தான்
செங்கையான் மால்ராம நாதேந்த்ரன்—துங்கமுறு

தேரை நடத்தித் திருவுலாப் போம்பொழுதில்
நேராக யானும் நெறிப்பட்டேன்—சீராரும்

மாத ரெழுவர் மருவ மறுகடைந்த
சேதி தனையுந் தெரிந்தேனென்—காதல்

அறியுங் குறிப்பை யறிவித்தேன் காமச்
செறிவுடையா ளென்று தெரிந்து—வறியரைப்போல்

வாடு மிடையும் வருந்த மனம்வருந்தத்
தேடும் விழியுஞ் சிவப்பேறக்—கோடெனவே

விம்முமுலை கச்சை விலக்கி யெனக்குமுந்தச்
செம்மை யிதழ்துடிக்கத் தேன்பிலிற்றச்—சும்மையொலி

மேகலையுஞ் சோர விளங்கும் வளைகழல
ஆகமும்பொன் போர்க்க வலமந்தேன்—மோகமதை எகூரு.

வாயால் வழுத்தல் மரபலவே யென்றுன்னிச்
சாயலாற் காட்டித் தனிநின்றேன்—நேயமுடன்

கூடுங் குலமகளிர் கொள்கை தனைமனத்தில்
நாடுங்காற் சற்றிடைந்து நாணினேன்—தேடும்

பொருள்வழியிற் கிட்டினதைப் போன்று மயக்கு
மருளகன்று சிந்தை மகிழ்ந்தேன்—தெருளகன்று

தேறு மிறைவன் றெரியாத தில்லையெனத்
தேறியங்கே சற்றுத் திகைத்துநின்றேன்—யாறறியாச்

சிந்தை யுடையேன் றெரிவா யெனுங்கருத்தைச்
சந்தமுறக் காட்டத் தலைகவிழ்ந்தேன்—இந்தமுறை அ00.

எல்லா மறிந்து மிருந்த படியிருந்தான்
வல்லான்மால் ராமநா தேந்திரன்மன்—நல்லன்

மதிமுகத்தான் கேட்க வழுத்துவதே நன்றென்
றதிமதுர வாசகத்தா லன்பே—துதிசிறந்த

கற்பகமே மேலாங் கருணைக் கடலான
அற்புதமே யாவிக் கமுதமே—யெற்பரவு

பச்சைப் பசுங்கிளியே பாரக் கொடைமுகிலே
இச்சித்தார்க் கேய்ந்த விருநிதியே—இச்சையுடன்

பேராழி யீற்றுயின்ற பேருருவே செங்கரத்தில்
ஓராழி யைத்தரித்த வுத்தமனே—காராழி அ0ரு.

தன்னைக் கடந்த தகைமையனே வல்லிலங்கை
மன்னைத் தடிந்த மதுகையனே—வன்னமுறு

தண்டலையின் மேகந் தவழுஞ் சிறப்பதனைக்
கொண்டிலகும் பூநகர்வாழ் கொற்றவனே—கண்டோர்கள்

சாலவனு மானத்தாற் சாரங்க பாணியெனும்
நீலமணி வண்ண நெடியோனே—கோலமுறும்

பூமாது தங்கிப் பொலிந்து செறிந்திருக்கும்
மாமனையின் வாழு மழவிடையே—நாமவேற்

செங்கரனே யெங்கள் திவாகரனே யொண்கயிலைச்
சங்கரனைப் போற்றுந் தகையோனே—மங்கலஞ்சேர்

மூதறிஞன் கல்விநிறை முத்தையப் பாவலனை
மூதறிவிற் றுங்கு முழுமுதலே—ஏதமிலா

ஆண்டகையே மேலா மறத்தா றடைந்தவருங்
காண்டகைய சீலங் கனிந்தவனே—பூண்டிலங்கும்

கற்பகப்பூ மாலை கவினுந் திருமார்பா
கற்பகத்தார்க் காக்குங் கரதலத்தாய்—அற்புடனே

கற்றோர் பிடியிருளைக் காணுமலே சீய்க்கும்
பொற்பா ரிரவிநிகர் பொற்புடையோய்—அற்பகத்தென்

வாய்நின் புகழுரைக்கும் மன்னு மனம்விரும்பிச்
சேய மனமுனையே சிந்திக்கும்—தூயமலர்ச்

செங்கை தலைகுவியுஞ் சீத நறுங்களபக்
கொங்கைவடிச் செய்யக் குவிந்தெழும்புந்—துங்கமுறும்

சண்பகப்பூ மேனி தழுவக் குழையுமே
நண்பகல்போ லேயிரவுங் கண்ணுறங்கா—திண்புயத்து

வள்ளலே நின்னை மகிழ்ந்திருந்து நாடோறும்
உள்ளும் புறம்பு முருவெழுதிக்—கள்ளமின்றிப்

பார்த்தும் நினைத்தும் பருவ மொருமூன்றும்
சார்த்திய நான்கதனிற் சார்தல்கண்டுஞ்—சீர்த்திமலி

அண்ணலே நின்பா லடையுநல் லின்பத்தை
யெண்ணியெண்ணி யாசைதனி லீடுபட்டு—வண்ண

மடவார் தருமுணவும் வாசமுறு பள்ளி
யிடமும் வெறுத்தே யிறைவ—மடமலிந்து

தன்னந் தனியா யிருந்து தளர்வடைந்தே
மன்னன் வருநாள் வரவதனை—உன்னி

யிருக்குந் தருணமதி லேந்தனின் சேனைப்
பெருக்கி னொலியும் பிறவும்—உருக்கிளரும்

தேரி னொலியுஞ் செவியிற் புகுந்தழைக்கக்
காரினொளி நின்னைவந்து கண்ணுற்றேன்—பாரில்

அரிய பெரியவென வான்றோர்சொல் லின்பந்
தெரியவெனை யின்பந் திளைப்பாய்—விரிய

உரைக்கின் மிகையா முடையவனே மூன்று
தரைக்கும் பெரியவனீ சாலும்—உரைக்கவென்பால்

தேருமுண்டு தாருமுண்டு சீரியநற் சேனையுண்டு
கூருங் கணையுங் கொடுஞ்சிலையும்—போருவக்கும்

யானையுங் கொற்றக் குடையும் அரசுவந்த
வானைச் செவிமடுக்கு மாமுரசும்—மானவுயர்

சங்குந் தகும்பரியுந் தாவுமக ரக்கொடியும்
பொங்கு மிவையுளநற் பொற்புடையேன்—செங்கைப்

பெரும்பொரு ளாய்ப்பெறலாம் பேணிநீ யானும்
அரும்பொருளைத் தேடினவ ளாவேன்—விரும்பியெனைக்

கூடி மணந்து குறைதீர்ப்பா யென்னமனத்
தோடுநான் சொல்லுங்கா லொன்னலரைச்—சாடும்

தனியரசுந் தன்னைப் புடைசூழ்ந்தார் தம்மை
நனிதாங்குந் தோளான் நகரப்—பனிமலியும்

மஞ்சுநிக ரொண்குழலார் மாமலரின் சேக்கைதனில்
அஞ்சிறகர் வீசி யழகாகத்—துஞ்சி

மழைக்குழலுந் தோற்கவெழில் வாயா லினிமை
தழைக்கவிசைத் தென்பாடித் தங்கித்—தழைக்குமுயர்

இன்பந் திளைக்கநல மீந்து மருந்துணையாய்
அன்பாய்ப் பயின்றும் அறம்பொருளும்—இன்புமருள்

நல்லா சிரியரையே நாடுமுதன் மாணவர்போற்
பல்பொழிலுஞ் சென்று பசுந்தேனை—மல்கவுண்ணும்

மூத்த வறிவு முதிர்ந்த கனிவண்டைப்
பார்த்திபன்பாற் றூது பகரவிட்டேன்—கீர்த்திமலி

மன்னவன்பாற் சென்று வழுத்தினதோ மற்புயத்திற்
றுன்றுந் தொடைமலர்த்தேன் றோய்ந்ததோ—வன்னமலர்ப்

பூங்கா வதனிற் புகுந்து களிப்படைந்து
தேங்குமது வுண்டு திளைத்ததோ—ஆங்குலவும்

நல்லார் தமது நயனந் தனக்குவெட்கிச்
சொல்லாம லோடத் துணிந்ததோ—அல்லவென்ன

காரணமோ மீண்டுவரக் காண்கிலே னென்றிளைத்தே
ஆரணந்தே ரஞ்சிறகின் அங்கமுடன்—சீர்சிறந்த

பாங்கியர்க ளோதிப் பயிற்றுவித்த வண்ணமுடல்
ஓங்குமின்பக் காத லுலாவேசல்—தாங்கினிமைத்

தாழிசையுங் கொச்சகமுஞ் சந்தமுறு சிந்துகளும்
ஏழிசையுஞ் சார்ந்த வெழிற்பதமும்—வாழிமதன்

ஆட்சிக் குரிய வருங்கலையுந் தூதுகளும்
மாட்சிமிகுங் கோவை வளத்துறையும்—நீட்சியுடன்

பேசும் விறலிவிடையும் பெட்பார் சிலேடைகளும்
ஆசுகவி யாதி யருந்தொடையும்—மாசகன்ற

சாத்திரமுந் தோத்திரமுஞ் சாற்று மனத்திலுன்னு
மாத்திரத்தில் விடளிக்கும் வாசகமும்—சேத்திரத்தின்

கோவைகளும் நீதி குறிக்கும் பலநூலும்
நாவிற் றிகழ்ந்து நலங்கனியப்—பூவையுடன்

சங்கை தெளியவெதிர் சாற்றிவிரித் தோதியுள்ளே
பொங்குமழற் காமப் புழுக்கமெனக்—கங்கொளிப்ப

நோக்க மறிந்துரைத்து நுண்ணறிவின் மிக்கவின்பந்
தேக்கி யுறையுஞ் செழுங்கிளியை—ஊக்கமுடன்

சென்றுதூ தாகித் திகழு மிறைவனிடம்
மன்றன் மணமாலை வாங்கிவா—என்றுரைத்துச்

செல்லவிட்டே னல்லதென்று சென்ற விளங்கிளியும்
செல்லாருந் தண்பொழிலிற் சேர்ந்தினத்தைப்—புல்லியங்குத்

தங்கிக் களித்ததோ தண்டலையின் வண்கிளையிற்
கொங்குவிரி பல்லவங்கள் கோதினதோ—செங்கனிகள்

உண்டு தெவிட்டி யுலவினதோ வொண்டொடியார்
கண்டுமொழி கேட்டுக் கருத்துயர்ந்து—நின்றதோ

நாற்கவியும் பாடி நவிலொழிய நல்லபொருள்
ஏற்பதற்குப் புல்லரிட மேகியவர்—பாற்பலநாட்

காத்திருந்து மக்கொடியர் கைவிரிக்கச் சிந்தைநொந்தே
ஆத்திரமா யேகு மறிஞரைப்போற்—பூத்திலங்கும் ௮௬௯.

தண்ணிலவங் காயை நினைந்து தடுமாறி
நண்ணிப் பழுக்குமென நாடிமனத்—தெண்ணியங்கே

தங்கி யிருந்ததோ என்னை மறந்ததுவோ
பாங்கியர்பாற் சார்ந்து பயின்றதுவோ—ஆங்கியக்கம்

என்னவோ மீளவிலை யென்செய்கோ வென்றதன்மேல்
வன்னமுறு பொன்றூவி மன்னியொளி—துன்னுமெழிற்

றோலடியுஞ் செய்ய பொலன்சூட் டழகுமன
மாலைசையக் கண்டோர் மகிழ்வனப்புங்—கோலமுறப்

பூத்தசெழுந் தாமரைப் பூஞ்சேக்கை யுற்றுணவு
பாத்தூட்டுஞ் சேவ லொடுபயிலும்—பூத்ததருப் ௮௭0.

பொன்னாட்டின் வாழ்க்கைப் பொலிவும் நலங்கருதி
இந்நாட்டி வீர்வா ழியற்கையும்—வின்னாட்டக்

காமுறுவோர் துன்பங் கடத்து முயர்மொழியும்
ஏமமுறு வேம்போல்வா ரிச்சையுடன்—தாமகிழ்ந்து

தேடி யடையுஞ் சிறப்புங் கலைமாது
நாடியுறு மூர்த்தியி னன்மரபுங்—கூடியிங்கே

உற்ற பறவைக் குலத்தி லுயர்ந்துநலஞ்
சொற்றமதி யன்னத்தைத் துன்னியே—பற்றுமென்றன்

சிந்தை விருப்பந் தெரிவித்தம் மன்னவன்பாற்
சந்துரைத்து வாவெனவே சாற்றிவிட்டேன்—நந்தாத ௮௭௧.

சாயல் சிறந்த தனியனமும் என்மனத்தில்
மேய கருத்தை விரித்ததோ—நேயமுறு

சுற்றுந் தனைக்கண்டு கூடித் தொடர்ந்ததோ
சிற்றடத்தின் பூஞ்சேக்கை நண்ணியதோ—உற்றபால்

நீரைப் பிரித்தருந்தி நின்றதோ சீரான
காரைப் பழித்த குழற்காட்டைச்—சாரநின்ற

ஒண்ணுதலார் தன்னடைகண் டேங்கியொளித் தோடினதோ
வண்ணநடை கற்கவவண் மன்னியதோ—மண்ணிருப்பை

எள்ளிப் பழம்பதியாம் பொன்னாட்டிற் சேகியதோ
உள்ளிப்பார்த் தொன்று முணரகில்லேன்—ஒள்ளிலைவேற் ௮௰.

செங்கை நான்றனைமேய சீரான கற்புமிக்க
மங்கைதம யந்தி மனமகிழத்—துங்கமணந்

கட்டிவைத்த மேலாங் குலமெல் லுரைத்தமொழி
கேட்டதுவும் பொய்யோ கிளர்ந்தபெரும்—பாட்டிற்

சிறந்தவள்பாற் சென்று திரும்பிவரா தாலே
அறந்தவா மாதொருத்தி யாகும்—மறந்தழைத்த

வேற்கண்ணா ளாயத்தின் மேலாள் என்புடனென்
பாற்கனிவாய்த் தங்கிப் பயிலுவாள்—காற்கினிய

பஞ்சூட்டு வாளமுது பாலூட்டு வாள்குழற்பூ
வஞ்சூட்டு வாளெற் குரியையாள்—நெஞ்சில ௮௰௫.

உறங்காதற் கேற்ற வுரைபகர்வா ளின்பம்
பெறுங்கால மென்னையுளம் பேணி—வறுங்காலம்

போக்காமற் பன்னூலும் போதிப்பாள் காமவெப்பந்
தாக்காமற் கண்டு தணிவிப்பாள்—நோக்கமிகுந்

தாயிற் சிறந்த தகைமையா ளென்னையின்றி
வாயில் கடந்தறியா மாமயிலாள்—வேயிற்

பிறந்த பரம்பொருளின் பேருளா லெற்குச்
சிறந்த வுயிர்த்துணையாஞ் சேடி—பிறந்த

அறலியலுங் கூந்த லணங்கனையா ளான
விறலியைநீத் தூதாக விட்டேன்—பெறலரிய ௯௰.

மன்னவன்பாற் சென்று வழுத்தினளோ மற்றவளும்
என்னைப்போ லாகி யிறைவனிடம்—துன்னும்

மணம்விரும்பிச் சிந்தை மயக்குற்றுச் சென்று
குணமறந்து போயினள்தான் கொல்லோ—உணவிருந்த

சாலைக்குட் சென்றோர்கள் தன்பசியை யாற்றியபின்
மேலை யறத்தை விரும்புவரென்—றேலும்

பழமொழியின் பண்பிற் படிந்துமறந் தென்பாற்
பிழையுன்னி னாளோவப் பேதை—மழைபயிலுங்

கைத்தலத்தான் சார்பாகச் சென்றாளைக் காண்கிலேன்
எய்த்திளைத்து வாடினே னென்னெஞ்சே—மெய்த்துணையாம் ௮௮௫.

உள்ளே யுறையு முடைப்பொருளா முன்னைமுன்மற்
றுள்ளா துடைப் பொருளையுள்ளி—எள்ளலுற

உள்ளத்தா னள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை—தெள்ளிப்

புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடுமென்—றினந்தெரிந்தோர்

சொன்ன மொழிக்கிலக்காய்த் தோன்றி யலமந்தேன்
அன்னவையைச் சாற்றினி யாவதென்னே—இந்நிலையில்

உற்ற வெனக்குரிமை யுன்னையல்லா திவ்வுலகில்
மற்றேது முண்டோ வழுத்துவாய்—சற்றெதிரிற் ௮௯௦.

றோன்றுமுரு வின்வண்ணந் தோற்றுவிக்குந் தூயவொளி
கான்றும் பளிங்கதுபோற் காதலுடன்—ஆன்றநீ

சார்ந்ததன் வண்ணமா யாதலியல் பாலெங்கும்
சார்ந்துசற் றேகழியத் தாண்டுவாய்—தேர்ந்தார்க்கும்

தேரா தவர்க்குந் திறனுணர்ந்து செவ்வியுற
ஓரா நளித்தங் குலவுவாய்—நேராக

எவ்வுலகு மேகா திமைப்போதி லேகுவாய்
அவ்விடம்விட் டண்டத் தணுகுவாய்—பௌவமும்

தாண்டுவாய் மன்ன ரறியாத் தனியிடத்தைக்
காண்டற் குருவெழுப்பிக் காட்டுவாய்—மீண்டுங் ௮௯௫.

கடைவாய் சிறிய வணுவி னணுவாகி
மிடையுஞ் செயலின் மிளிர்ந்தே—யடைவாய்

ஒருபொருளைக் காட்டி யுடனே மறைப்பாய்
வருமாயை யாமெனவே வாழ்வாய்—ஒருமையுடன்

ஆக்க லளித்தல் அழித்தல் மறைத்தலொடு
போக்க லெனும்வினைக்கும் போவாய்நீ—மேக்காகும்

நோற்றல் பயிறல் நினைத்த லெனுமிவற்றிற்
கேற்ற துணையா யிசைந்திருப்பாய்—ஆற்ற

விரித்துரைப்ப தென்னே வியனுலகத் திற்சஞ்
சரிக்குமுயி ரெல்லாமுந் தந்தங்—கருத்தின்வணம் ௧௦௦.

இன்பம் பெறுதற்கு மேற்ற துணையாவாய்
அன்பிற்கு மோர்தலைமை யாகுவாய்—நின்பெருமை

நீயே யறிவை நினைப்போல் விச்சைவலி
மேயபொரு ளெவ்வுலகும் வேறுண்டோ—ஏயுமுறை

சாற்றற் கெளிதலவே சார்ந்திருக்கு மென்றேழை
ஆற்றியின்பந் தேக்க வருளுவாய்—வேற்றுமையா

யெண்ணிறு வித்தருணா மேதுபுகல் வேறெனக்கு
வண்ணமுறு நெஞ்சே மதித்துணர்வாய்—திண்ணமுடன்

நீசென்று மெய்துமது நிச்சயமா யானறிவேன்
பேசின்ப மன்றல் பெறுவிப்பாய்—தேசொன்றும் ௧௦௫.

தூயோ னுறையுமிடஞ் சொல்லக்கேள் பன்மலரும்
மேய வசோகுகொன்றை வேங்கைபன்னீர்—ஆயும்

மரவங் குருக்கத்தி மந்தார மாத்தி
குரவங் கடம்புவகு ளம்பா—திரிகோங்கு

மாதவி கூவிளம் பாரிசா தம்வன்னி
தாதகி புன்னையொடு சம்பங்கி—சீதநறும்

முல்லையிரு வாட்சிவண்டு மூசுமெழிற் செவ்வந்தி
மல்லிகைநல் ரோசா மருபிச்சி—பல்வகையாஞ்

செய்யமலர் பூக்குஞ் செழுங்கொழுமை தண்டளிரைப்
பெய்யுநறுந் தேமா பெரும்பலா—துய்யகனி ௧௧௦.

வாழை மடற்கமுகு வண்டோங்கு மொண்கொழுஞ்சி
மாழையெலு மிச்சைகொய்யா மாதுளையும்—தாழாத

நார மெனச்செறிந்த நன்மரங்க ளின்வகையும்
ஈரமிகு மாகவரை யெட்டிவளர்ந்—தேரமையும

மன்வழியே மன்பதைக ளென்ன வுயர்மாற்றந்
தன்னைக் கடைப்பிடித்துத் தற்சார்ந்து—துன்னும்

இரவலர்க்குப் பூவும் இனியநறுந் தேனும்
கரமலர்ந்துந் தண்மை கவினச்—சிரமசைத்தும்

ஈந்து தருவென்னற் கேற்பச் செயல்காட்டி
வார்ந்தமதுக் காவின் வளம்பெருகிக்—காந்தியுடன் ௬௧௫.

ஓங்குமலர்ப் பூம்பொழிலி னூற்றநறுந் தண்பொய்கைப்
பாங்கர் விளங்கிப் பகன்மழுங்கத்—தேங்குமொளி

செய்ய பளிக்கறையி னுப்பண் செறிந்திலங்குந்
துய்ய வரியணையிற் றேற்றமுற்று—மையகன்ற

திங்கட் கவிகை செறிய விணைக்கவரி
பொங்கிப் புரளப் புகழ்வினைஞர்—தங்கியவண்

ஏத்தெடுப்ப மாத ரிசைத்து நடம்புரிய
மூத்த வறிஞர் முதுநீதி—நாத்திகழ

ஓதக் கவிஞ ருரிய தமிழ்பாட
மேதக்க பாடகர்கள் மெல்லிசையைப்—போத ௬௨0.

இசைக்கவதற் கேற்ற வியமுழங்கக் கூத்தர்
அசைப்பிப்பான் காட்டி யசைய—நசைக்கேற்பக்

கோயில் வினைஞர் குறைவின் றெனக்கழற
ஆயுங் கணக்க ரசுரிமைக்—கேயும்

பலதுறையும் போற்றிப் பகர வவையாவும்
நலமுடனே கேட்டுநனி கண்டும்—நலமுடைய

சித்திரத்து வாடாச் செழுந்தா மரைபோல
எத்திறத்தும் வாடா வெழின்முகத்தோ—னத்திவரும்

உற்றோர் மனங்களிப்ப வொண்பரிசில் செங்கரத்தாற்
பற்றி யளித்துமொளிர் பைங்கதிர்போற்—கொற்ற ௬௨௫.

அரியே றெனமகிழ்ந்தே யன்பா யமர்ந்து
விரிபொழிலிற் பொய்கைதனின் மேவி—விரிதென்றற்

காற்றின் மணத்தைக் களித்துநுகர்ந் தின்பமுடன்
வீற்றிருப்பா னெம்மிறைவன் மேதினியில்—ஆற்றலுறும்

என்னெஞ்சே நீவிரைவா யேகி யிதமாகப்
பன்னு முயர்நண்பு பாராட்டி—யென்னுரிமை

வல்லா னெழில்ராம நாதேந் திரன்மகிழ
எல்லா மறிய வெடுத்தோதி—மெல்லமெல்லச்

சிந்தைதனை யென்பாற் றிருப்பிக் கலந்தெனையே
சந்ததமுங் கூடித் தழைப்பதற்கு—நந்தாக் ௩௫௦.

குணமாலை தாங்குமெழிற் கொற்றவன்றன் கையான்
மணமாலை வாங்கிநீ வா.

முற்றுஞ்
சுபம்.